பக்கங்கள் 12 விலை ரூபா 3-00

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 சித்திரை 9 றம்ழான் பிறை 25 இதழ் 69

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 22-04-1990

மில்க்வைற் நீலசோப்பில் நுரைவளம் நூலிழைகளினூடே நுழைந்து அழுக்கை அகற்றித் துணிக்கு வெண்மையையும் பிரகாசத்தையும் தருகிறது. புதுப்பொலிவுடன் நறு மணத்துடனும் கிடைக்கிறது.

மேலுறையிலிருந்து 100 திருக்குறள்களை அனுப்பி கவர்ச்சியான ஒரு லேஞ்சியைப் பெற்றுக்கொள்ளவும்

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

(ஏ-699)

ஈதுல் - பிதர்
(றம்ழான் பண்டிகை)

வாழ்த்துக்களை எமது எண்ணற்ற இஸ்லாமிய அபிமானிகளுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஏந்தல் நபியின் ஏவல்கள்"

அரிய நூலும், புனித படத்துடன் கூடிய கலண்டரும் 25 மில்க்வைற் மேலுறைகள் அனுப்பி அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளவும். மில்க்வைற் யாழ்ப்பாணம்.

(ஏ-699)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

★ இலங்கைத் தமிழர்

# ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வருவதற்கு தடை!

## புதிய சட்டங்களை அமுல்படுத்த சம்பந்தப்பட்ட நாடுகள் முயற்சி

(பாரிஸிலிருந்து எஸ். எஸ். குகநாதன்)

**இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக வருவதைத் தடுக்கும் முயற்சியில் அந்நாடுகள் ஈடுபட்டுள்ளன. இலங்கையில் நிலைமைகள் சீரடைந்து வருவதைத் தொடர்ந்தே ஐரோப்பிய நாடுகள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளன.**

மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, டென்மார்க், சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளில் பெருந் தொகையான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ள அதேவேளையில் தினமும் பலர் இந்த நாடுகளுக்கு வந்தவண்ண முள்ளனர்.

ஏற்கனவே இந்த நாடுகளில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களை திருப்பி அனுப்புவது குறித்து இதுவரை எந்த நாடும் முடிவெடுக்காத போதிலும் புதிதாக வருபவர்களைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளன.

மேற்கு ஜெர்மனி மே மாதம் 30ம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரவுள்ள புதிய சட்டத்தின்படி, ஜெர்மனியில் தஞ்சம் கோர விரும்புபவர்கள் கொழும்பிலுள்ள ஜெர்மன் தூதரகத்திலேயே தமது பிரச்சனைகளைக்கூறி விசா பெற்ற பின்னரே இங்கு வரமுடியும். ஜெர்மனி விமான நிலையங்களிலோ அல்லது சட்டவிரோதமாக நாட்டிற்குள் வந்து நின்றோ தஞ்சம் கோரமுடியாது.

சுவிற்சர்லாந்து, பிரிட்டன்,

(12-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## மாத்தயா கலந்துகொள்ளும் முதலாவது பொதுக்கூட்டம்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) யாழ்ப்பாணத்தில் நாளை பிற்பகல் முதல் தடவையாக பொதுமக்கள் முன்தோன்றி உரையாற்றவிருக்கிறார். இந்தக்கூட்டத்தில் திரு. யோகரட்ணம் யோகி, திரு. காசி ஆனந்தன், திரு. ராஜன் ஆகியோரும் உரைநிகழ்த்துவர்.

யாழ். முற்றவெளி மைதானத்தில் நாளை நடைபெறவிருக்கும் தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின்

(12ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைச்சரவை விரிவுபடுத்தப்பட்டது

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவை நேற்று விரிவுபடுத்தப்பட்டு 13 இணை அமைச்சர்களும், 5 துணை அமைச்சர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் ஒருநிகழ்ச்சியில் புதிய அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். (து)

விடுதலைப்புலிகள்

## பாராளுமன்றம் செல்ல வசதியாக விரைவில் பொதுத்தேர்தல்?

(நமது நிருபர்)

பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, புதிய தேர்தலை சந்திப்பதற்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தயாராகி வருகின்றார் என்ற அறிகுறிகள் தென்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

● விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு ஜனநாயக நீரோட்டத்தில் முழுமையாகக் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவும்– (12ம் பக்கம் பார்க்க)

## கடவுச்சீட்டு விண்ணப்பங்கள்

[மானிப்பாய்]

யாழ். கடவுச் சீட்டு அலுவலகத்தில் கையேற்கப்பட்ட 67 விண்ணப்பங்கள் நேற்று முன்தினம் கொழும்புக்கு

(12ம் பக்கம் பார்கக)

புலிகளின் போர் வல்லமையால்

## இந்தியப் படையிலுள்ள தமிழரும் போரிடும் அந்தஸ்தை பெற்றுள்ளனர்!

- தேனிசை செல்லப்பா பேட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் வல்லமையால் இந்தியப் படைகளில் உள்ள தமிழர்களும் இந்தியாவில் போரிடுவதில் ஒரு அந்தஸ்தைப்பெற்றுவிட்டனர். பொதுவாக இந்திய இராணுவத்தில் கூர்க்கா படைகளுக்கும், சீக்கியப் படைகளுக்கும் ஒரு மதிப்பு இருக்கிறது. காரணம் அவர்கள் போர் புரிவதில் திறமை வாய்ந்தவர்கள் என்பதால். அந்த மதிப்பும் அந்தஸ்தும் இப்போது இந்தியப் படையிலுள்ள தமிழர்களுக்கும் கிடைத்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலாசாரப்பிரிவில் இசை நிகழ்ச்சியை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த தேனிசை செல்லப்பா ஒத்திகையை நிறுத்தி இடைநடுவில் ஈழநாடுவுக்கு பேட்டியளித்தார் அருகில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் மன்



னணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு, டொமினிக்கும் இருந்தார்.

தேனிசை செல்லப்பா தமது பேட்டியில் தொடர்ந்து கூறியதாவது:

சிறுவர்கள் தாமேமுன்வந்து இராணுவப் பயிற்சி எடுத்து நாட்டு விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதை நேரடியாகப்பார்க்கும்போது உண்மையிலேயே அந்தத்தியாகத்தை வீரத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாமலிருக்கிறது.

தமிழ் நாட்டுமக்கள் எப்போதும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத்தான் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் பல எழுச்சிப் பாடல்களை பாடிய தமிழக

(12ம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாடு கடற்றொழிலாளர்களுக்கு விடுதலைப் புலிகள் உதவி

(மன்னார்)

பேசாலையில் விடுதலைப் புலிகள் பாதுகாப்பிலிருக்கும் 57 தமிழக கடற்றொழிலாளர்கள் புலிகளால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இராமநாதபுரம், திருநெல்வேலிமாவட்டங்களைச்சேர்ந்த இநத கடற்றொழிலாளர்கள் இறால் பிடிப்பதற்காக தலைமன்னார் கடலைநோக்கி வந்தபோதே புலிகளால் அழைத்து

(12ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அதிகாரி நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் தூதரகத்தின் இரண்டாவது உயர் அதிகாரி ரீஜன் கோர்பீல்ட் நாளையாழ். நகர் வருகின்றார்.

இவர் யாழ் நகரின் தற்போதைய நிலைமையை நேரில்

(12-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் புதிய பொலிஸ்அதிகாரிகள்

[நமது நிருபர்]

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முக்கிய நகரங்களில் பொலிஸ் தலைமை காரியாலய இன்ஸ்பெக்டர்கள் நான்கு பேரும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளாக மேலும் நான்கு பேரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் சந்திரகுமாரும்,

(12ம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### தேவை

சீமெந்து வெற்று பாக்குகள், கோழித்தீன் பாக்குகள் தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். (ஏ-703)

வில்வம் பழம் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-704)

### முதலாம்பிள்ளை

நோர்வே தமிழ் நாதம் நடாத்திய வானொலி நடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் இரண்டு நாடக நூல்கள்: கெட்டிக்காரர்கள் 25/- முதலாம்பிள்ளை 30/- 19 நாடகங்கள் எங்கும் கிடைக்கும். (சி-3759)

### தவறிவிட்டது

எனது குடும்பப் பதிவு F. R. C. அட்டை 9-4-90 அன்று ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக்கும் யாழ். பஸ் தரிப்பு நிலையத்திற்கும் இடையே தவறிவிட்டது அதனைக்கண்டெடுத்தோர் ஈழநாடு காரியாலயத்திற்கு அல்லது க. சோமசுந்தரம் உடையார்வளவு புன்னாலைக் கட்டுவன் என்னும் எனது முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-3777)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## இன்று மண்ணின் தினம்

# மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி வகுக்குமா?

**சிவதர்ம வள்ளல் க. கனகராசா**

மண்ணின் தினத்தை இன்று கொண்டாடப்படுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் கடந்த ஆறுமாத காலத்திற்கு முன்பாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. மண்ணின் தினம் இருபதாண்டுகளுச்கு முன் 1970ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் தேதி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மண்ணுலகத்தில் வாழும் மக்கள் நாம், வாழும நிலப் பகுதியைப் பேணிப் பாதுகாத்து வாழையடிவாழையாக வரவுள்ள நம் சந்ததியினர் தலைமுறையினர் நிலமெனும் நல்லாளின் நல்வளங்களை நல்லியல்புகளை நன்றே பெற்று நல்வாழ்வு வாழ்ந்திடும் நல்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தலே மண்ணின் தினத்தை இருபது வருடங்களுக்கு முன்னர் உருவாக்கிய முன்னோடிகளின் நோக்கமாக இருந்தது. இத்தினம் சூழல் மாசுறு வண்ணம் போதனை மூலமும் சாதனை மூலமும் பணியாற்றிவரும் பெருமக்களுக்கு ஒரு நன்னாள்-பெருநாள்-திருநாள் என்றே கூறலாம்.

இம்மண்ணுலகம் எவ்வாறு நல்வாழ்வுககுக் குந்தமாகக் கேடுறுகிறது என்பதை அறிந்து கொள்வதால் இந்நற்பணியில் எம்மையும் ஈடுபடுத்தி எமது தலைமுறையினரின் நல்வாழ்வுக் கேற்ப இம்மண்ணுலகத்தைப் பேணிட முடியும்.



கரையோர நிலப்பரப்பைக் கடல் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை; ஆறு, குளம், போன்ற நீர் நிலைகள் வண்டல் சேர்வதாலும் அழுக்கு நீர் போன்றவற்றால் மாசுறுதல்; காடுகள், வனங்கள் மனிதனுடைய சுயநலத்தால் அழிக்கப்படுதல்; புனர்நடுகை மேற்கொள்ளப்படாதது, காடு விசாலிப்பில் அக்கறை கொள்ளாதது; கட்டுப்பாடற்ற அளவிலும் முறையிலும் களைகொல்லிகளையும், பூச்சி கொல்லிகளையும் பாவிப்பதால் மண்வளம் நலிதல்; நகரப்பகுதிகளில் கழிவு நீர் வெளியேற்றம், புகை ஆகியவற்றுக்கு ஏதுவான தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல்; உக்கியோ, மக்கியோ மண்ணோடு மண்ணாகக் கலந்து விடாத தன்மை கொண்ட பொலிதீன் பாவனை அதிகரிப்பு; கழிவுப் பொருட்களுக்கான மாற்றுப் பாவனை இல்லாது போதல்; இவை கண்டறியப்பட்ட கேடுகளுள் சிலவாகும். இவற்றில் ஏதாவது ஒரு கேட்டினையேனும் நாம் ஒழித்துவிடுவதில் எமது பங்களிப்பினைச் செலுத்தமுடியும்.

எமது வளவுகளிலும், வெறுங்காணிகளிலும் பயன் தரு மரங்களை மேலும் மேலும் நாட்டுவதுடன், கற்பகதருவாம் பனை மரத்தைத் தறித்து அழிப்பதையேனும் தவிர்த்தால் நாம் மட்டுமன்றி எமது தலைமுறையினரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி வகுத்தவர்களாவோம்.

எம்மைப் பொறுத்தமட்டில் பல்லாண்டுகளாக இப்பணிக்கு உதவுமுகமாக மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வருவதுடன பிறந்தநாள், திருமணம், நினைவு தினங்கள் ஆகிய நிகழ்ச்சிகளிலும் மரம் நாட்டுவதை ஊக்குவித்து வருகிறோம். இன்று நாம் கலந்து கொள்ளும் ஒருநிகழ்ச்சியில் மரக்கன்றுகள் அன்பளிப்புச் செய்கின்றோம்.

சர்வதேச வார சஞ்சிகை ''ரைம்'' தனது 1989 டிசம்பர் 18-ந் திகதிய இதழில் கூறியபடி ''மண்ணும் தனக்கொரு தினத்தைக் கொள்ளட்டும்: ஆனால் வரலாற்றிலேயே பாரிய இவ்வெளிப்பாடு நல்லவையின் ஆரம்பமாகட்டும்.'' 115 நாடுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் இத்தினத்தை ஏற்ற வகையில் கொண்டாட பாரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன. இலங்கையிலும் மத்திய சூழல் அதிகாரசபையும் இலங்கை தேசிய அரசு சார்பற்ற அமைப்புகளின் சபையும் ஏனைய அமைப்புக்களினதும் தனியார்களினதும் ஒத்துழைப்புடன் தன் பங்களிப்பைச் செய்கின்றன.

## புதிய வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தேவரையாளி இந்துக் கல்லூரியில் இயங்கும் முறைசாராக் கல்விப்பிரிவின் 90ம் ஆண்டுக்கான பாடநெறிக்கான புதிய வகுப்புக்கள் யாவும் மே மாதம் 2ம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அரசடி அருள்மிகு ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தான வழிபடுவோர் சங்க பொதுக்கூட்டம் இன்று மாலை சங்கத் தலைவர் சட்டத்தரணி அ. முத்துக்கிருஷ்ணன் தலைமையில்தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உபவிதிகள் அங்கீகரித்தல், பிரேரணைகள், புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறவுள்ளது.


## பார்வையற்றோர், பார்வை குறைந்தோருக்கான கல்வி

★ மேற்படி கல்வி வசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது

★ கல்வி, விடுதி வசதி, உணவு யாவும் இலவசம்.

★ சிறு பிள்ளைகளைப் பாரமரிப்பதற்கு விஷேட உதவியாளர் உண்டு.

★ 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிற்சி அளிக்கும் திட்டம் உண்டு

★ பல்கலைக்கழக படிப்பு வரை வசதி செய்து கொடுக்கப்படும்.

நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க:

**அதிபர்,**
**நவீல்ட் பாடசாலை,**
**விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்**
**கைதடி.**

(சி-705)



## முக்கிய அறிவித்தல்

### திருநெல்வேலி அரசடி
### அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள்
### தேர்த்திருப்பணிச் சபை

மேற்படி ஆலயத் தேர்த்திருப்பணிச் சபை தொடர்ந்தும் தமது திருப்பணியை நடாத்தி வருகின்றதென்றும் திரு. சண்முகம் தணிகாசலம். சமாதான நீதவான் ஒழுங்குமுறைகளை உதாசீனம் செய்து 8-4-1990 அன்று இது சம்பந்தமாக ஓர் அறிவித்தலை பத்திரிகைகளில் பிரசுரித்த காரணத்தினால் 12 - 4 - 1990ல் நடந்த தேர்த்திருப்பணிச் சபைக்கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி இவரை இச்சபையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தேர்த் திருப்பணியைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு அடியார்கள் பணத்தைத் தொடர்ந்தும் 21 - 3 - 1989ல் நிறுவப்பட்ட திருப்பணிச்சபைத் தனாதிகாரி திரு. ம. பாலசுப்பிரமணியத்திடம் ஒப்படைத்து அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

கு. ஜயக்குமார், காரியதரிசி.

அ.முத்துக்கிருஷ்ணன், தலைவர். (ஏ-702)



## நாலாவது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கண்மணி சீனிவாசகம்**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

54/4, இராமநாதன் றோட் ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம்.

(சி- 701)


## உணவுமுத்திரை விநியோகம்

(மட்டுவில்)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த, திங்கள்கிழமை முதல் ஐந்தாவது வழங்கலான இப்புதிய உணவு முத்திரைகள் வழங்கும் வேலைகள் இப்பொழுது நடைபெறுகின்றன. (82)

## நோயாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாகப் பஸ் தரிப்பு நிலையம் இருந்தபோதிலும் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ்வண்டிகள் சில நிறுத்தப்படுவதில்லை என்று புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பஸ்வண்டிகள் மணி அடித்தாலும் நிறுத்தப்படாது கைதடிச்சந்தியிலேயே நிறுத்தப்படுவதால் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை நோயாளர்கள் அதிக சிரமத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளாகிவருகின்றனர். (54)

## கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையை இல்லாமல் செய்வதற்கு வலிகிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உபஅலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை பிரதேச சபை அச்சுவேலி உபஅலுவலக நிர்வாகம் செய்துள்ளது.

## வைத்தியசாலையில் சுகாதார சீர்கேடு

(புங்குடுதீவு)

கடந்த சில வாரங்களாக வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சுத்திகரிப்பாளர் இல்லாமையினால் வைத்தியசாலை எங்கும் குப்பை, கூழங்கள் காணப்படுகின்றன.

இங்கு கடமையிலீடுபட்ட சுத்திகரிப்பாளர் தொடர்ந்து லீவில் சென்றுள்ளதினால் வைத்தியசாலை வார்ட்டுக்களும் வெளிப்பகுதிகளும் குப்பைகளால் நிறைந்து காணப்படுகின்றன. (101)

# ஈழநாடு வாரமலர்

EELANADU VARA MALAR


## நமது பார்வையில்...

### தியாக சீலம்

ஒடுக்கப்பட்ட சமூகம் தலை நிமிர்ந்து வாழவேண்டு மென்றால், இதயசுத்தியோடு போராடும் வீரர்களின் நினைவுகள் போற்றப்படவேண்டும்.

நாட்டுப்பற்றோடு, நமது வீரர்கள் போராடினார்கள்; போராடிவருகிறார்கள்!

இவர்களிலே பலர் தமது இன்னுயிரையே நாட்டுக்காகத் தந்துள்ளார்கள்.

சுயநலத்தைப் பேணாது, தமது சொத்து, சுகம் என்று கருதாது, உயர் இலட்சியத்தையே குறியாகக் கொண்டு பல இன்னல்கள் மத்தியிலும் மன உறுதி தளராது போராடுபவர்கள் என்றுமே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இன்னுயிர் தந்த தியாகச் செம்மல்கள், வரலாற்றிலே நிரந்தர இடம் பெற்றுவிட்டார்கள்.

இவர்களுக்கான நினைவுச் சின்னமுயற்சியும், செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்படவேண்டும்.

இச்சிந்தனை உரிய இடத்தில் மலர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. மக்கள் இதற்கான இதயபூர்வப் பங்களிப்புச் செய்ய முன்வரவேண்டும்!

# குழந்தை இலக்கியக் கலை வடிவம்

**தா. தேவமதுரம்**
யாழ்ப்பாணம்

தற்காலத் தமிழ் இலக்கிய நாற்பரப்பின் அளவு மிகப்பரந்து விரிந்ததாகக் காணப்படுகின்றது. முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்த்த காலந்தொடக்கம் தற்கால பரியந்தம் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்காகத் தமிழ்ப் பேரறிஞர்கள், கவிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் பலர் பற்பல இலக்கியக் கலைவடிவங்களை ஆக்கி உள்ளார்கள். இவ்வாறு இடம் பெற்ற இலக்கிய கலை வடிவங்களுள் குழந்தை இலக்கியமும் ஒன்றாகும்.

குழந்தை இலக்கியத்தை எழுத்துருவில் முதன் முதலில் தோற்றுவித்த பெருமை ஒளவைப்பிராட்டியாரைச் சார்ந்ததாகும். ''ஆத்திசூடி'', ''கொன்றை வேந்தன்'', 'மூதுரை, 'நல்வழி' போன்ற நூல்களை ஒளவைப் பிராட்டியார் குழந்தைகளுக்காகவே வெளியிட்டார். ஒளவையார் தமது குழந்தை இலக்கியப் பாடல்களைத் தமிழ் நெடுங்கணக்குவரிசையில் அமைத்துக் காட்டியதின்மூலம் ஒரு புதிய உத்தியைக்கையாண்டமையை நாம் அவதானிக்கின்றோம்,

''அறம் செய விரும்பு'', ''ஆறுவது சினம்'', ''இயல்வது கரவேல்'' — இப்படியாக மிகவும் இனிமையான இலகு தமிழ்ச் சொற்களால் தாம் எடுத்த கருத்தைக் குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்தில் பதித்துவிடுகின்ற தனித்துவ முத்திரையை ஒளவைப் பிராட்டியார் கைக்கொண்டிருந்தார், இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்புது முயற்சிக்குப் புத்தூக்கம் கொடுக்கும் வகையில் பாரதியார் பாப்பாப் பாட்டைப் பாடியுள்ளார். குழந்தைகள் பெரிதும் விரும்பும் இசைப்பாட்டின் மூலம் இலகு தமிழ் நடையில் அழகிய சந்தப் பாடலாக பாப்பாப்பாட்டைப் பாரதியார் பாடியிருக்கின்றார்.

''ஓடி விளையாடு பாப்பா -நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடிவிளையாடு பாப்பா -ஒரு
குழந்தையை வையாதே
பாப்பா''

என்று குழந்தைளோடு சேர்ந்து அவர்தம் சிந்தனைத் திறனை உயர்த்திவைக்கின்ற பெருமுயற்சியைப் பார்க்கின்றோம்.

அடுத்து சின்னஞ்சிறு கதைகளைக் கதைப்பாடல்களாக குழந்தைகளுக்காகவே எழுதி குழந்தை இலக்கிய வடிவமைப்பை மேலும் ஒருபடி வளர்த்துச் சென்ற பெருமை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களையே சாரும். அழகிய கதைப் பாடல்களை குழந்தைகள் விரும்பிக்கற்கும் வகையில் ஆக்கி அவர் பொறித்த இலச்சினை குழந்தை இலக்கிய வரலாற்றில் ஒரு தனியிடத்தைவகிக்கின்றதென லாம். குழந்தைகள் நித்திரை விட்டுத் துள்ளியெழும் பொழுது,

''பொழுது புலர்ந்தது,
பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி பொலிவதைப்
பாராய்
பொன்னே எழுந்தோடி
வாராய்!''

என்று அன்பு தழுவ அழைக்கும் பாங்கு ..னித்தன்மை வாய்ந்ததாக உள்ளது.

கவிதைகள் மூலம் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காகப் பங்களிப்புச் செய்தவர்களுள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மயிலை சிவமுத்து, அழவள்ளியப்பா போன்றவர்களையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இந்திய மண்ணில் ஆரம்பித்த குழந்தை இலக்கிய வளர்ச்சி அதன் அண்டை நாடுகளான இலங்கை, சிங்கப்பூர் போன்ற கடல் கடந்த நாடுகளில் உள்ள தமிழ் ஆர்வலர்களின் உள்ளங்களிலும் விரிவடைந்தது. இதன் விளைவாக இலங்கையில் குறிப்பாக ''தங்கத்தாத்தா'' என அன்புடன் அழைக்கப்பட்ட நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களே இத்துறையில் சிறப்பாக ஈடுபட்டார். அவரது பங்களிப்புக்களுடன் குழந்தை இலக்கியத்தைக் கவிதைகள் மூலம் வளர்த்து வந்தவர்களில் மு. நல்லதம்பி, வித்துவான் க. வேந்தனார், கவிஞர் நீலாவணன், திமிலைத் துமிலன், மகாகவி, இ. முருகையன் ஆகியோரையும் குறிப்பிடலாம். இதில் பெயர் சூட்டப்படாத வேறு பலகவிஞர்களும் அவ்வப்போது இத்துறையில் தமது பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்.

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் குழந்தைகள் மிகவும் விரும்பி அபிநயத்துடன் படிக்கும் வகையிலான பல பாடல்களை பாடியிருக்கிறார். குழந்தைகளைக் கூட்டி ஆடிக் கூழ் காச்ச முற்பட்ட கவிஞர் அவர்கள்

''ஆடிப் பிறப்புக்கு நாளை
விடுதலை
ஆனந்தம் ஆனந்தம்
தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக்
கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை
தின்னலாம் தோழர்களே!''

என்று அன்புடன் ஆரவாரிப்பதைக் காண்கின்றோம்.

ஆனால் வித்துவான் க. வேந்தனார் அவர்கள் குழந்தைகளுடன் குழந்தையாகிவிட்ட

( 9-ம் பக்கம் பார்க்க)

## விவசாயம்

# வீட்டுத் தோட்டத்தினால் போஷாக்கு நிறைந்த உணவுகளைப் பெறலாம்!

**வே. கு. சிவானந்தன்**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

வீட்டுத் தோட்டத்தினால் போஷாக்கு நிறைந்த உணவு வகைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம். கடந்த வாரம் பயன் தரும் சில உணவுப் பயிர்கள் பற்றி தெரிவித்திருந்தோம். இங்கு மற்றும் சில பயிர்கள் பற்றி விளக்கம் தரப்படுகிறது.

**மரவள்ளி:**

இது ஒரு கிழங்குப் பயிர் இதனை வீட்டுத்தோட்டத்தில் நாட்டி வருடம் பூராவும் பயனைப்பெறலாம். இப்பயிரை வேலிக்கு அண்மையில் அதாவது வேலியிலிருந்து 1-2 மீ. இடைவெளியில் நாட்டலாம். மதில் காணப்பட்டாலும் 1-2 மீ.இடை வெளி விட்டு நாட்டலாம். வீட்டில் கழிவு நீர்களை ஊற்றலாம். அதிக வெயில் காலங்களில், மட்டும் அப்படி நீர் ஊற்ற வேண்டிய தேவையேற்படும் மற்றக் காலங்களில் நீர்ப்போசனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது.

இதற்கு நோய், பூச்சி, புளுத் தாக்கம் இல்லையென்றே கூறலாம்.

கிழங்குகளை காலை உணவாகவோ அல்லது மாலை உணவாகவோ அல்லது காயப் போட்டு மாவாகவோ எடுத்து தோசை, பிட்டு போன்ற உணவாகவோ, அல்லது தேங்காய் எண்ணெயில் அல்லது நல்லெண்ணெயில் பொரித்து மதிய உணவோடு சாப்பிடலாம்.

**வாழை:**

வாழை என்று கூறும்போது கறிவாழை, பழவகை என்று இரண்டு வகை உண்டு. கறி வாழையில் சாம்பல் மொந்தன், கறி மொந்தன் என இரு இனங்கள் உண்டு. பழ வாழையில் கதலி, இதரை, கப்பல் (கோழிக்கூடு) ஆனைவாழை, பண்டி வாழை, செவ்வாழை, சீனிக்கதலி, (இறப்பர் கதலி) எனப் பலவகை உண்டு. இவற்றில் எமது உலர் பிரதேசங்களில் அதிகமாக கதலியும் அடுத்த படியாக கப்பல், இதரை போன்ற வாழைகளுமே நடப்படுகின்றன. வீட்டுத் தோட்டத்திலே ருசியானதும், இனிமையானதுமான அதிக போசாக்குடையதுமான பழம் வேண்டுமானால் இதரையை அல்லது கப்பல் வாழையை நாட்டலாம். அல்லது சீனிக்கதலி போன்றவற்றை நாட்டலாம். வாழையை நாம் விரும்பும் இடங்களிலே நாட்டலாம்.ஒவ்வொரு நாளும் நீர் ஊற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வீட்டின் முன்புறத்திலோ அல்லது பின்புறத்திலோ நாட்டலாம். ஆகக் குறைந்தது 2,3 வாழையாவது நாட்டிப் பயனைப் பெறலாம்.

வாழை நாட்டும் போது 2½-3 அடிஆழத்திற்கு கூடுதலாக நாட்டவேண்டும். அப்பொழுதுதான் 6-7 வருடங்களுக்கு அந்நிலையத்திலிருந்து பயனைப்பெற முடியும் ஒவ்வொரு குட்டியும் வெடிக்கும் போது அதன் கிழங்குகள் தாய் மரத்திலும் பார்க்க மேலேயே காணப்படுகின்றன. அதனால் தான் 6-7 வருடங்களின் பின் வாழையின் கிழங்குகள் தரை மட்டத்தில் இருப்பதனால் பயன் தருவது குறைகிறது.

இதன் பிற்பாடு நாம் வேறு ஓர் இடத்தில் குழியை வெட்டி நாட்டவேண்டும். வாழையை குருக்கன் நோயே பெருமளவில் பாதிக்கின்றது. குருக்கன் வந்த வாழையை கிழங்குடன் பிடுங்கி எரித்து விடுவதே சாலச்சிறந்தது. வாழை நடும் போது குருக்கன் நோய் ஏற்படாத தோட்டத்தில் இருந்து வாழைக் குட்டியை பெற்று நடுவது நன்மை தரும். குருக்கன் நோய் வந்த வாழையின் இலைகள் சிறியனவாகவும் சுருண்டும் காணப்படும். இலைகள் நெருக்கமாகவும் இருக்கும். இதனை விட வாழையை நிலக்கறையான் தாக்கும். இதனைக் கட்டுப்படுத்த அல்றின் அல்லது அல்ரெக்ஸ் அல்லது மலத்தியன் நிலத்தினில் தூவி விடலாம். இவ்விரண்டினையும் விட வேறு நோய், பூச்சிகள், தாககங்கள் காணப்பட்டாலும் அவற்றின் தாக்கங்கள் குறைவான தாகும்.

**எலுமிச்சை:**

;தேசிக்காய்] எலுமிச்சைப் பயிரை வீட்டிலே ஒரு கன்றாவது நாட்டினால் போதுமானது இதனால் எமது வீட்டுத்தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அயலவர்க்கும் விற்பனை செய்யவோ அல்லது பண்டமாற்று முறை வியாபாரம் செய்யவோ முடியும். இப்பயிரை வீட்டின் ஒரு மூலையில் நடலாம். இப் பயிருக்கு கூடுதலாக எந்தப்பசளையையும் இடத்தேவையில்லை. வீட்டிலே சேருகின்ற கழிவுப் பொருட்களை பயிரின் அடியில் இருந்து 1-2 அடி தள்ளி கிடங்கு வெட்டி தாழ்க்கலாம். அத்தோடு இறந்த மிருகங்களை கட்டாயமாக இந்தப் பயிரிக்கு தாழ்க்கவேண்டும். [எலுமிச்சை என்ற பெயர் எலும்பு - இச்சை ஆகும்] எலும்பை இச்சையாகக் கொண்ட பயிர் ஆனபடியினால் தான் இப்பயிருக்கு எலுமிச்சை என்ற பெயர் வந்தது. எலுமிச்சைக்கு நோய் இல்லையென்றே கூறலாம். குருத்தினை ஒரு வகை புழு சாப்பிடும். அதனை நாம் ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் அவதானித்து கையினால் பிடித்து அழித்து விடலாம்.

**பாகல்:**

இப் பயிரை வீட்டிலே நடுவதானால் ஒரு நிலையம் நாட்டினால் போதுமானது அதற்கு பந்தல் போட்டு படரவிட

(௯-ம் பக்கம் பார்க்க)

# மொரிசியசு நாட்டில் இரு வாரங்கள்

ஐ.தி.சம்பந்தன்

## தமிழர்களுக்கு தனியான வரலாறு கலாசார சிறப்புகள் உண்டு!

வெளிநாடுகளில் வதியும் தமிழ் மாணவர்கள் மருத்துவக் கல்வியை பயில்வதற்கு உலகத் தமிழர் மருத்துவக் கல்லூரி ஒன்றினை தமிழர்கள் வதியும் பொருத்தமான நாடு ஒன்றில் நிறுவுவது என்பது உலகத் தமிழர் எழுச்சிக் கழகத்தின் குறிக்கோளில் ஒன்றாகும்.

கடந்த இரு ஆண்டுகளாக இதுபற்றி மேற்கொண்ட ஆய்வுகளின் பயனாக இது போன்ற ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு உலகத் தமிழர்களின் ஆதரவு முழுமையாக இருந்து வருகிறது. இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கும் திட்டங்கள் தயாரிப்பதற்கும் அத்துறையில் ஈடுபாடும், அனுபவமும் மிக்கவர்களைக் கொண்ட தற்காலிக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மொரிசியசில் நடைபெற்ற 7வது உலகத்தமிழர் ஆராய்ச்சி மாநாட்டின்போது இக் கருத்துக்களை உள்ளடக்கிய கையேடு ஒன்று விநியோகிக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கு பலரின் ஆதரவு மேலும் அதிகரித்துள்ளது.

### மருத்துவ கல்லூரி

இம் மருத்துவக்கல்லூரி மூலம் உலகத் தமிழர்களிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்தலாம் என்பது எழுச்சிக் கழகத்தின் கருத்தாகும். உலகத் தமிழர் மருத்துவக் கல்லூரியை இலங்கையில் நிறுவுவதற்கு முதன்மை அளிக்கப்பட்டது. அது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் உயர்கல்வி அமைச்சருக்கு கழகத்தினால் ஓர் விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. கழகக் குழுவினர் இது தொடர்பாக அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இன்று இலங்கையிலுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக தமிழர்களின் உயர்வுக்காக அனைத்துலக ரீதியாய் நிறுவப்படும் இம் மருத்துவக் கல்லூரிக்கு அரசாங்கம் அனுமதி வழங்குவதை தாமதப்படுத்தலாம். அல்லது தட்டிக் கழிக்கலாம் என்ற முடிவினை நாம் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இதனால் இக் கல்லூரியை இலங்கையில் நிறுவுவது சாத்தியப்படாது என்று கருதப்பட்டது. மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு அடுத்ததாக மொரிசியசு நாட்டுக்கு இரண்டாவது உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. அங்கு வாழும் தமிழ் மக்களிடையில் தமிழ் உணர்வு மிகுந்து காணப்படுவதோடு, தமிழ்க் கலை கலாச்சாரங்களை கடந்த 260 ஆண்டுகளுக்கு மேலாக பேணிக்காத்து வருகின்றனர். நடந்து முடிந்த ஏழாவது உலகத்தமிழர் ஆராய்ச்சி மாநாடு அவர்களது தமிழ்ப் பற்றையும், தமிழ்க் கலாச்சார மேம்பாட்டையும் வலுவடையச் செய்துள்ளது.

### தூதுக்குழுவில்

அங்கு வாழும் தமிழ் மக்களின் கருத்துக்களை அறிவதற்காகச் சென்ற தூதுக்குழுவில் நானும் ஒருவனாகச் செல்லும்வாய்ப்புக்கிடைத்தது அங்கு பலஅறிஞர்களைகளையும் பொதுப் பணிகளில் ஈடுபாடுடையவர்களையும்சந்தித்து இரு வாரங்களாக மேற்கொண்ட கருத்துப் பரிமாறலின்போது அம்மக்களிடமிருந்து அபரிமிதமான ஆதரவும், வரவேற்பும் கிடைத்தது. மருத்துவக் கல்லூரி கட்டுவதற்காக நிலத்தை தந்து உதவுவதோடு, கட்டடச் செலவின் ஒரு பகுதிநிதியையும் வழங்குவதற்கு அம்மக்கள் ஆவல் கொண்டிருப்பதை அறியக் கூடியதாக இருந்தது.

அனைத்துலக ரீதியான ஒரு அமைப்பை அங்கு நிறுவுவதற்கு முன்னர் மொரிசியசு நாடு பற்றியும், தமிழ்மக்கள் பற்றியும் உலகத் தமிழர்கள் ஓரளவு அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக 'மொரிசியசு நாட்டில் இரு வாரங்கள்' என்ற தலைப்பில்இச்சிறுகட்டுரையை எழுத முனைந்தேன். அந்நாட்டைப் பற்றியும், மக்களைப்பற்றியும் அறிந்த பின்னர் உலகத் தமிழர் மருத்துவக் கல்லூரி அங்கு அமைக்கப்படுவது பற்றிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வண்ணம் உலகத் தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. ஒரு நல்ல பணி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் எல்லோரினதும் கருத்தறிவது சாலப் பொருத்தமானதே.

தமிழர்கள் உலகில் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர், இத்தகைய நாடுகளில் ஒன்று மொரிசியசு. இங்கு வாழ்கின்ற தமிழர்களுக்கு தனியான வரலாறு, கலாச்சார சிறப்புக்கள் உண்டு. ஏறக்குறைய 260 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்து குடியேறிய தமிழர்கள் அவர்களது தமிழ்க் கலாச்சாரத்தை இதுவரையும் பாதுகாத்து வந்துள்ளனர்.

இந்துமகா சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் மொரிசியசுதீவு 1860 சதுர கிலோ மைல் விஸ்தீரணப் பரப்புடையது. இங்கு மொத்தம் பத்து இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். விவசாய முக்கிய வருவாய் ஈட்டும் தொழிலாகத் திகழு[illegible]. அதே வேளையில் கைத்தொழி[illegible] துறையிலும் இன்று அபரிமித வளர்ச்சியடைந்து வருகிறது.

மொரிசியஸ் மக்கள் நான்கு முக்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீனர்—மொறிசியன் (பொதுவான கலப்பு மக்கள்) ஆகிய நான்கு சமூகத்தினர் வாழ்கின்றனர். இங்கு நடைமுறையிலிருந்து வரும் மொழிகள் அராபிக், ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, உருது, பிரெஞ்சு, குஜராத்தி, மண்டறீன். மராட்டி என்பனவாகும். ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும், பிரெஞ்சு துணைநிர்வாகமொழியாகவும் இருந்து வருகின்றது. பிரெஞ்சு, கிறியோஸ் மொழிகள் பொதுவாக எல்லோரா[illegible]லும் பேசப்பட்டு வருகின்றன.

### நான்கு மதங்கள்

இங்கு சைவசமயம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் ஆகிய நான்கும் முக்கிய மதங்களாக விளங்குகின்றன.

இங்கு வாழ் தமிழர்கள் எல்லோருக்கும் தமிழ்ப் பெயர்கள் உண்டு. ஆனால் பெரும்பான்மையானோர் தமிழ் பேசமாட்டார்கள். அவர்கள் தமிழர்கள் என்று போற்றப்படுவதற்குச் சின்னமாக விளங்குவது தமிழ்க் கலாச்சாரமே. இந்தக் கலாச்சார வளர்ச்சியே தமிழர்களின் தனித்தன்மையை துலங்க வைத்துக்கொண்டிருக்கிறது.

இந்தச் சிறிய தீவில் 200க்கு மேற்பட்ட தமிழ்க் கோயில்கள் இருக்கின்றன. இங்கு இந்துக் கோயில்களை தமிழ்க் கோயில்கள் என்றே அழைப்பர். இந்த ஆலயங்கள் தான் தமிழர்களைத் தமிழர்களாக வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன. இங்கு வாழ்கின்ற பல்வேறு சமூகத்தவர்கள் சைவ கலாச்சாரத்தின் பெருமையை நன்கு புரிந்துகொண்டவர்களாக வாழ்கின்றனர். வேற்றுமையில் ஒற்றுமைகாண்பதற்கு தமிழ்க்கலாச்சாரம் அதாவது கோயில் வழிபாடுகள் வழிவகுத்துள்ளன.

இங்குள்ள தமிழ்க் கோயில்கள் கூட்டு அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டு சிறப்புடன் வளர்ச்சியடைந்து வருகின்றன.

1960ம் ஆண்டு உருவாக்கப்பட்ட மொரிசியசு தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்புக்கு மொரிசியசு அரசாங்கம் 1987-88ம்ஆண்டிற்கு ரூ3,539000/- நன்கொடையாக வழங்கியுள்ளது என அறியக்கிடக்கிறது. கோவில்களில் பணிபுரியு[illegible] பூசகர்களுக்கு அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்ப[illegible]கிறது. அரசாங்கம் தமிழ்க் கலாசாரத்திற்குத் தேசிய ந்[illegible]தஸ்து கொடுத்துள்ளதை இது நிரூபிக்கின்றது.

### சமய விழாக்கள்

மகாசிவராத்திரி, புதுவருடப் பிறப்பு, தைப்பொங்கல, தீபாவளித் திருநாள், ஆ[illegible] அமாவாசை, தைப்பூசம், தீமிதி (தீக்குளித்தல்), ஆடி பதினெட்டாம் பெருக்கு, புரட்டாதிச் சனி ஆகியன த[illegible]ழர்களின் முக்கிய சமய விழ[illegible]க்களாக இருந்து வருகின்றன இவ்விழாக்களைக் கொண்டாடுவதற்குக் காவடி ஆட்டம்

(9-ம் பக்கம் பார்க்க)

# வீடு கட்டுகின்றபோது மரப்பாவனையை கூடியளவு குறைக்க முயலவேண்டும்!

க. சந்திரசேகரம் - கைதடி

இன்று சூழல் மாசடைதல் பற்றி நாலாபக்கத்திலிருந்தும் குரலெழுப்புகின்ற நேரத்தில் சூழல்மாசடைதலிற்கு ஒரு காரணமான மரங்களை வெட்டுதல் பற்றியும் நாம் ஓரளவு சிந்தித்து செயலாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். இன்றைய சூழ்நிலையில் நாம் வீடுகளைக்கட்டும்போது பெருந்தொகையான மரங்களைப் பயன்படுத்துகிறோம். பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப வீடுகள் தேவைதான். ஆனால் சனத்தொகை பெருகும் விகிதாசரத்தில் இயற்கைத் தாவரங்கள் பெருகவில்லை என்பதையும் நாம் இவ்விடத்தில் உன்னிப்பாக அவதானிக்கவேண்டும். ஆகையினால் வீடு கட்டுகின்றபோது மரப்பாவனையை நாம் கூடியளவு குறைக்க முயலவேண்டும். அப்படியாக முயலும் பட்சத்தில்தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு சொற்ப மரங்களாவது இருப்பதுடன், எமது பல இடங்கள் பாலை நிலமாக மாறாமல் இருக்கும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### நிலை:

நாம் வீடுகட்டும்போது பயன்படுத்தும் நிலையை முதலில் எடுத்துக்கொள்வோமானால் பணம் படைத்த சிலர் 5''X4'' என்ற அளவுள்ள தீராந்திகளையும் ஏனையோர் 4''X3'' என்ற அளவுள்ள தீராந்திகளையும் பயன்படுத்துகிறார்கள். அதன் அளவுகளைப் படிப்படியாக நாம் 4''X2'' எனவும் 3''X2'' எனவும் மாற்றவேண்டும். அதையும் கூட வெளிப்பக்கங்களுக்கு மட்டும் வைத்துவிட்டு உட்பக்கங்களுக்கு வருகின்ற நிலைக்கு பதிலாக சுவரிலே இரும்பினால் செய்த பிணைச்சல்களை வைத்துக்கட்டி நிலையில்லாமல் கதவைமட்டும்போடலாம் இந்நிலையில் மரத்தை மீதப்படுத்துவதுடன் பணத்தையும் நேரத்தையும் மீதப்படுத்தலாம்.

### யன்னல்:

மேற்கூறியது போலத்தான் யன்னல் செய்யும்போதும்கூட பெரியஅளவிலான தீராந்திகளையும், லூவர்ஸ் என அழைக்கப்படும் கடைச்சல் கட்டைகளையும் போட்டு மரத்தையும் நேரத்தையும், பணத்தையும் வீணாக்காமல் தற்போதைய சூழ்நிலையில் குறைந்த பட்சம் 4''X2'' என்ற அளவில் யன்னல்களை அமைத்து அதற்கு கண்ணாடியினால் அடைக்கப்பட்ட கதவைப் போடலாம். லூவர்ஸ் போடாவிட்டால் வீட்டுக்குள் வருவதால் [illegible]வாசத்துடன் சம்பந்தப்பட்ட பல நோய்கள் ஏற்படலாம். அத்தோடு மட்டுமல்லாமல் [illegible]டில் நீங்கள் ஆசையுடன் வாங்கிவைத்த பொருட்கள்கூட தூசிமயமாகிவிடும். இந்நிலையில் நாளாந்தம் பொருட்களைத் துடைக்கும் போதுதான் ஏன் இந்த லூவர்ஸ் போட்டோம் என நினைப்பவர்களும் உண்டு.

### கூரை:

பே[illegible]லும் நாம் வீடுகளுக்கு கூரை போடும் போதும் கூட சில சிக்கன முறைகளை கையாளலாம். உதாரணமாக இன்று சுவர் தீராந்தி என அழைக்கப்படும் தீராந்தி 4''X3'' என்ற அளவில் போடப்படுகிறது. அதையும் கூட 4''X2'' அளவாகவோ அல்லது 3''X2'' என்ற அளவிலோ போட்டு கூரையைப் போடலாம். அதுவும் தேவைப்படாத பட்சத்தில் பனை மரங்களைச் சுவரில் வைத்துக் கட்டுவதன் மூலமும் மரப் பாவனையைக் குறைத்து குறைந்த செலவில் வீடுகளை அமைக்கலாம்.

### பனை:


அதைவிட பெருந்தொகையான பயன்களைத் தருகின்ற கற்பகதரு என அழைக்கப்படும் பனையைப் பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். பனை மரத்தைக்கூட சரியான அளவுகளிலே வெட்டி, கழிவு ஏற்படாத வகையில் பாவிப்பதுடன் மரத்தைப் போடும் அளவுகளிலேயும் தூரத்தை இயலுமானவரை கூட்டலாம். உதாரணமாக தற்போது ஓடு போடும் கூரைக்கு 18'' ற்கு ஒரு பனை மரம் போடப்படுகிறது. அதை 21'' ஆக மாற்றினால் அது பெரிய பாரதூரமான விளைவை ஏற்படுத்தாது. சிறுதொகை மரத்தை மீதப்படுத்தலாம்.

### தளபாடம்:

தளபாட உற்பத்தியைப் பொறுத்த வரையிலும் சிறிய தளபாடங்கள் செய்யும்போது கழிவான பலகைகள்தான் பயன்படும் என்பது உண்மை. ஆனால் சிறிய தளபாடங்களுக்காக பெரிய பலகைகளையும் பெரிய மரங்களையும் அரியாமல் தற்போதைய நாகரிக மாற்றத்திற்கேற்ப இரும்புக் கம்பி,இரும்புக்குழாய்போன்றவற்றில் தளபாடங்களைச் செய்யும்போது மரம் மிச்சமாவதுடன் தரமான உறுதியான தளபாடங்களைச் செய்யக் கூடியதாய் இருக்கும்.

எமது பிரதேசம் பாலைவனமாக மாறாமலும், சூழல் மாசடைதலிற்கு இலக்காகாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# தொடர் நவீனம்



# யாககுண்டம்

-செங்கை ஆழியான்

[12]

யாழ்தேவி காற்றினைக் கிழித்துக்கொண்டு விரைந்தது. பொல்காவலைக்கும் ராகமைக்கும் இடைப்பட்ட பாதையில் வேறெங்குமில்லாத காற்றின் பிளவுபட்ட பேரிரைச்சல் இராசம்மாவின் காதுகளைத்தாக்கவில்லை. திக்பிரமை பிடித்தவள் போல வெளியே வெறித்துப்பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

''அம்மா, போயிட்டு வாறன்...... என்று மல்லிகா விடைபெற்றமை நினைவில் எழுந்தவாறிருந்தது. கட்டுநாயக்க விமானத்தளத்திற்கு கொழும்புப் பம்பலப்பிட்டி லொட்ஜ்சிலிருந்து புறப்பட்ட போது, இராசம்மா இடிந்து போய்விட்டாள். கண்களிலிருந்து நீர் வழிந்துபார்வையை மறைத்தது. தன்னைக்சட்டிக் கொண்டு, மல்லிகா துயரத்தில் அழுவாள் எனஇராசம்மா எதிர்பார்த்தாள்.

என்ன கல் நெஞ்சம். பிறந்த மண்ணைவிட்டு ஆகாயத்தில் பறக்கப்போகிறுள். பத்துமாதங்கள் சுமந்துபெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றேரைப் பிரிந்து பிறநாட்டிற்குச் செல்லப்போகிறுள். இதயத்தில் பாரம், நெஞ்சில் துயரத்தின் நெருடல், மனதில் பிரிவின் துயர் எதுவும் மல்லிகாவை வாட்டவில்லை.

சர்வசாதாரணமாக, ''அம்மா போயிட்டுவாறன். ஐயா போயிட்டுவாறன்'' என்று அவள் விடை பெற்றுள்.

அந்த லொட்ஜ் வெளிநாட்டிற்கு வழிபார்த்துக் காத்திருப்பவர்களால் முட்டிவழிந்தது. யாழ்ப்பாணத்து இளைஞர்கள் வெளிநாட்டுக்குப் பயண ஒழுங்கு செய்யும் ஏஜண்டுகளிடம் ஆயிரக்கணக்கில் கட்டிவிட்டு மாதக்கணக்காகக் காத்திருந்தார்கள். வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் கன்னிப்பெண்கள், முகந்தெரியாத எதிர்காலக் கணவர்களிடம் செல்வதற்காவும் முகந்தெரிந்த கணவர்களிடம் செல்வதற்காகவும் காத்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில்தொலைபேசி அழைப்புகளுக்குச் செலவிட்டு காத்திருந்தார்கள்.

இந்த மண்ணைவிட்டு ஓடிவிடும் அவசரம் அவர்களிடம் இருப்பதை இராசம்மா காணத்தவறவில்லை. அவர்களில் ஒருத்தியாக மல்லிகாவும் அந்த லொட்ஜில் தங்கிளுள்.

வெளிநாட்டில் இருந்து உழைக்கும் கணவன்மாரிடம் பேசுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பல பெண்கள் வந்திருந்தார்கள். தொலைபேசி மணி ஒலிக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரின் இதயமும் துடிதுடித்துப் பதைக்கும். 'அவர் தான் அழைக்கிருரோ' என எண்ணிக்கொள்ளும். தொலைபேசி இடத்திலிருந்து தங்கள் பெயர் சொல்லி அழைப்பு வரும் என ஆவலோடும் படபடப்புடனும் காத்திருப்பார்கள்.

இரவு பகலாக அந்த லொட்ஜ் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும்.

''ஒரு லட்சத்து முப்பதாயிரம் கொடுத்திருக்கிறன். நாளையிண்டைக்குப் பிளைற்'' என்பான் ஒருவன்.

அதனைக்கேட்டு அனுபவப்பட்ட சிலர் சிரிப்பார்சள்.

''வந்து ஒரு கிழமைதான் ஆகுது. அதற்குள் அவசரப்படாதை. நாளையிண்டைக்கு அந்த ஏஜன்ட் வந்து இன்னும் பத்து நாள் காத்திருக்கச் சொல்வான்.''

ப்படித்தான் நடக்கும். மாற்றம், துயரம், செலவு அனைத்தும் அங்குள்ளவர்களை வாட்டுவதை சரவணமுத்தர் அங்கு தங்கியிருந்த நாட்களில் கண்டிருக்கிருர். வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டு இடைநடுவில் திரும்பி வந்த சிலரும் அங்கிருந்தார்கள். அவர்கள் நடைப்பிணங்களாக நடமாடுவதை அவர் காண நேர்ந்தது. வீட்டை விற்றுப்பிள்ளைகளைஅனுப்பிவைக்கப் வந்திருக்கும் பெற்றேர். நகைநட்டுகளை விற்றுப்பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி ஏமாந்திருக்கும் பெற்றேர்.

ஏன் இப்படி ஒரு நிலை இந்த மண்ணிற்கு ஏற்பட்டது?

''இப்ப கனடாவிற்கு ஒன்றரை லட்சமாம். அதுவும் கஷ்டமாம்...''

''சவுதிக்கே நாற்பது கேக்கிருன்கள். அங்கபோய் இப்ப உழைக்கேல து.''

''சுவிஸ் பரவாயில்லை. ஆனுல் போறது கஷ்டம்...''

''எனக்குத் தெரிந்த ஒரு ஏஜென்ட் இருக்கிருர். நேர்மையான ஆள். காசு கட்டின ஒரு வாரத்தில அனுப்பிவிடுவார். வேணுமெண்டால் சொல்லும் ஒழுங்கு படுத்தித்தாறன். இன்ஞெரு ஆளையும் தெரியும்''

இப்படி நித்தம் நடக்கும் பேச்சுக்கள்.

வெளிநாட்டுத் தொலைபேசிகள் வரும். ஆவலோடு ஓடிச் சென்று பேசும் பெண்கள். டேசி முடித்துவிட்டு உலகத்தின் இன்பமெல்லாம் கிட்டியதுபோல திருப்தியுடன் வருவோர் சிலர். கண்ணீர் மல்க விம்மியபடி வெளியில் வரும் சிலர்.

''இந்தா இப்ப பேசிவிட்டுப் போறது ... மனிசி... தொலைபேசி இணைப்புக் கிடைத்திருக்காது, என்னெண்டு கிடைக்கும்? அவவின்ர புரிசன் இத்தாலியில மருந்துவித்து உள்ளே இருக்கிருனும். அவவுக்குத் தெரியாது. எனக்குப் பொடியன் இரகசியமாக எழுதியவன்''

''கடன் பட்டு வெளிநாட்டுக்குப் போய்... வேலையில்லாது அகதியாக இருந்து வேறு என்ன வழி? குறுக்கு வழியில சம்பாதித்தால் தான்...''

சரவணமுத்தருக்கு இந்தப் பேச்சுக்களைக் கேட்டுக்கேட்டு அலுத்துவிட்டது. வெளிநாடு வெளிநாடு என்று அவர்கள் சாகிருர்கள். யாழ்ப்பாணத்தில் நல்ல உத்தியோகத்தில் இருக்கும் பலர் வேலையை விட்டுவிட்டு வந்து அந்த லொட்ஜில் காத்திருந்தார்கள்.

பணம் உழைப்பது மட்டுந்தான் வாழ்க்கையா? மனைவி பிள்ளைகளுடன் நிம்மதியாக சிரித்துப்பேசி வாழ்வதை விட்டுவிட்டு எங்கோ அடிமைகளாக ஏச்சும் பேச்சும் வாங்கிக் கொண்டு கையேந்தி வாழ்கின்ற வாழ்விற்காக இவர்கள் ஏன் ஓடுகிருர்கள்?

பணம்... பணம்.

அவர்களில் பலர் வறுமையால் இந்த மண்ணைவிட்டு ஓடவில்லை. பேராசையால் இந்த மண்ணைவிட்டுப் பாய்கிருர்கள்.

சரவணமுத்தருக்குத் தெரிந்த ஒரு பையனை அவர் அங்கு காண நேர்ந்தது. அவன் அவரைப் பார்த்துச் சிரித்தான்.

''என்னைத் தெரியுதே, கிளாக்கர் ஐயா.'' என்ருன்.

அவனை அவர் அடையாளம் கண்டு கொண்டார்.

''தெரியும் தம்பி. ஐயா அம்மா சுகமே? கிட்டடியில தானே கலியாணம் செய்தனீர்''

''ஆறு வரியமாகுது, கிளாக்கர் ஐயா. இரண்டு பிள்ளைகள். கனடாவிற்குப் போகலாம் என்றிருக்கிறன்.''

''நல்ல வேலையிலேயல்ல இருந்தனீர்? அதைவிட்டிட்டீரே?''

''இருந்தாற்போல இந்தச் சந்தர்ப்பம் வந்தது. அதுதான் அப்படியே விட்டிட்டு வந்திட்டன். பிள்ளையளுக்கு வெளிநாட்டிற்குப் போனல் உழைச்சு அனுப்பலாம். பக்கத்துவீட்டு ஆக்களுக்கு வெளிநாட்டிலிருந்துஉடுப்புகள், ரீவீ, டெக்கெண்டு வாறது. அதுகளைப்பாத்து என்ர பிள்ளையளும் மனிசியும் ஏங்குதுகள். அதுதான் நானும்...'' என்ருன் அவன்.

அவன் வெளிநாட்டிற்குப் போகிற காரணம் அவருக்கு வியப்பினைத் தந்தது.

மனைவியோடும் பிள்ளைகளோடும் வாழவேண்டிய இனிய இளமைக்காலத்தை வெளிநாட்டில் அந்நியப்பட்ட மண்ணில் கழிக்கப் போகிருன். அங்கிருந்து அவன் அனுப்பப் போகிற பொருட்களைக் கட்டிக் கொண்டு அவன் மனைவியும் பிள்ளைகளும் காலத்தைக் கழிக்க வேண்டியதுதான்.

இப்போது அந்தத் துயரத்தின் கடுமை தெரியாது. தெரியவரும்போது இளமை சழிந்திருக்கும். வீணே செலவழிந்திருக்கும்.

அன்பு, பாசம், பற்று எல்லாம் பணத்தின் முன், மெல்ல அற்றுவிடுகின்றன.

நான்கு ஐந்து ஆண்டுகள் வெளிநாட்டில் உழைத்துவிட்டு, 'இனித்திரும்பி வெளிநாட்டிற்குப் போவதில்லை' என்ற எண்ணத்துடன் வரும் கணவனிடம் மூன்ரும் நாள் மனைவி கேட்கிருள்:

''எப்ப போகப்போறியள், அப்பா''

உறவு நிலைகள் அந்த மட்டத்திற்கு இந்த மண்ணில் வந்துவிட்டன.

மல்லிகாவும் வெளிநாட்டிற்குப் பறப்பட்டுச் செல்லப் போகிருள்.

அவர்கள் பணம் கட்டிய ஏஜெண்ட் ஒரு வாரத்தில் பயண ஒழுஙகுகளைச் செய்திருந்தான்.

மல்லிகா பாஸ்போர்ட் தனக்கென எடுத்துக்கொண்டு வந்திருந்தாள். அதனை அந்த பயண ஏஜெண்ட் வாங்கிக் கொள்ளவில்லை. அவளின் புகைப்படம் ஒன்றினை வாங்கிச் சென்றவன் இரண்டு நாள் கழித்து ஒரு பாஸ்போட்டுடன் வந்தான். அது ஒரு மலேசியப் பெண்ணின் பாஸ்போர்ட். அந்த மலேசியப்பெண்ணின் படம் இருக்க வேண்டிய இடத்தில் மல்லிகாவின் படம் இருந்தது.

''பயப்பட ஒன்றுமில்லை, சேர். இந்த பாஸ்போர்ட்டிற்கு மட்டும் இருபத்தையாயிரம் கொடுத்திருக்கிறன். இந்தப் பெண் பிரான்சிற்கு நேரடியாகச் செல்ல விசா எடுத்திருக்கிருள். பாங்கொங் போய் நேரே பாரிஸ்தான். இஞ்ச பாருங்க மிஸ் மல்லிகா இனி உங்கட பெயர் மல்லிகா வல்ல. ற்ரேஸ் பெர்ஞண்டோ. அப்படியே எழுதப் பழகிக் கொள்ளுங்கோ. பாங்கொங்கில சந்தேகப்பட்டு விசாரித்தால் பயப்படாமல், நான் சொல்கிற அட்ரசைச் சொல்லுங்கோ. அங்க போன் பண்ணிஞல் அவங்க நீங்க ற்ரேஸ் தான் என சொல்லுவாங்க. பயப்படத் தேவையில்லை.''

அவன் பலவற்றைச் சொல்லிக்கொடுத்தான் 'ற்ரேஸ் பெர்ஞண்டோ' எனக் கையெழுத்துப்போடக் கற்றுக் கொடுத்தான். கொண்டு சென்ற ஏராளமான உடுப்புக்களையெல்லாம் விட்டுவிட்டு ஒரு சிறு கைப்பையுடன் ஏயர் போர்ட்டிற்கு அழைத்துச் சென்ருன்.

அவள் புறப்பட்டு விட்ட செய்தி, பிரான்சிலுள்ள தமையன் மோகனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

''இடையில திருப்பி அனுப்பி விட்டால் என்ன செய்யிறது?'' என்று பயத்துடன் இராசம்மா கேட்டாள். அவளை ஏஜெண்ட் இரக்கத்தோடு பார்த்தாள்.

''பெரும்பாலும் அப்படி நடக்காது. இந்த பாஸ்போர்ட் நல்லாப் பொருந்தியிருக்குது. அந்தமலேசியப்பெண் மாதிரித் தான் உங்க டோட்டரும் இருக்கிருங்க பயப்படத்தேவையில்லை. நைன்ரிப்பேசன்ட் சுவர்...'' என்ருன் அவன்.

அந்த லொட்ஜில் நாற்பத்தைந்து நாட்கள் தவங்கிடந்து பயணப்பட்ட ஒரு கன்னிப் பெண் இடைநடுவில் திரும்பி வந்திருந்தாள். அவள் அழுகை இன்னமும் நிற்கவில்லை.

இருந்த ஒரேயொருகாணியை விற்றுப் பயண ஏஜெண்டிடம் காசாகக்கொட்டிவிட்டு ஊரில் கடன்பட்டு கொழும்பில் நாற்பத்தைந்து நாட்கள் தங்கிச் செலவழித்து விமானமேற்றி அனுப்பிவிட்டு, மகள் அங்கு போய்ச் சேர்ந்த செய்தி வருமெனக்காத்திருந்த பெற்றேருக்கு மகளே திரும்பி வந்தாள்.

எவ்வளவு பணம் ஒருநாள் கொழும்பில் இருக்கத்தேவை?

லொட்ஜிற்கு ஒரு படுக்கைக்கு வாடகை ஒரு நாளைக்கு எழுபத்தைந்து ரூபாய். இருபத்தைந்திலிருந்து, ஒவ்வொரு நாளும் சனம்கூடக்கூட நாள் வாடகையும் அதிகரித்துவிட்டது. இரவில் அந்த லொட்ஜைப்பார்க்கவேண்டும். வெளிவிருந்தை, போர்ச்தரை. கன்ரின் தரை, முற்றம் எல்லாம் பாய் போட்டுப்படுத்திருப்பார்கள். ஒருவரின் கால் நீட்டிஞல் மற்றவரின் தலைமீது விழும். ஒருபுறம் திரும்பிப் படுத்தால் இன்ஞெருவருடன் மோத நேரிடும். ஒரு பாய்க்கு இருபத்தைந்து அறவிட்டார்கள்.

அந்தப் பாய்கூடக்கிடைக்காமல் சிலர் வாங்கில், கதிரைகளில் முடங்கிக்குந்தியிருந்தார்கள். விடியப்புறமே பாத்ரூமிற்காக கியூ தயாராகிவிடும்.

—அனுப்பியாகிவிட்டது. ஒருவிதமாக பத்து நாட்கள் தங்கியிருந்து அவர்கள் மல்லிகாவை வெற்றிகரமாகப் பிரான்சிற்கு அனுப்பிவிட்டார்கள். அவள் அங்குபோய்ப் பத்திரமாகச் சேர்ந்த செய்தி வந்ததும் அவர்கள் யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

யாழ்தேவி ஓடுகிறது. இராசம்மா வெளியில் பார்த்தபடி ஏங்கிப்போய் இருக்கிருள். எட்டுப்பிள்ளைகளில்ஆறுபிள்ளைகள் வெளிநாட்டில் வாழ்கிருர்கள். ஒரு பேரப்பிள்ளை கூட இந்த மண்ணில் பிறக்கவில்லை. அவள் மடியில் கிடக்கவில்லை. அவளின் மார்பில் உதைக்கவில்லை, அவள் மடியில் சிறுநீர் கழிக்கவில்லை.

அந்தப்பாக்கியத்தை அவள் மடி செய்யவில்லை.

கண்களில் நீர் முட்டியது. சரவணமுத்தர் அதனைக் கவனிக்கத் தவறவில்லை. ''என்னப்பா?''

''ஒன்றுமில்லை. சடைசியாக மல்லிகாவும் போய்யிட்டான். இனிமற்றரெண்டும் இருக்கவா போகுதுகள்? கடைசியில நானும நீங்களுந் தான் மிஞ்சட போறம்.''

அவர் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக மடியில் தடவிஞர். தீன் புகையிலை தட்டுப்பட்டது. கைஎடுத்துக்கொள்ளவில்லை. அவரால் சில நாட்களாக இப்போது புகையிலையை வாயில் அதக்கிக் கொள்ள முடியவில்லை. வாயில் ஒரு எரிவு. தொண்டையில் ஒரு தடுப்புப்போன்ற உணர்வு.

''எவ்வளவு இலகுவாக எங்களை உதறிவிட்டு மல்லிகா போயிட்டாள். பார்த்தியளே? மனத்தில் ஒரு கலக்கம். துயரம் ஒன்றுமில்லை. பெத்துவளவன்.''

''இராசம். பழம் பழுத்தால் மரத்தில் தங்கியிருக்காது. விழத்தான் செய்யும். சரி போகுது விடு.''

''பிளாஸ்கில கோப்பி இருக்குது தரவே?'' என்று இராசம்மா பிளாஸ்க்கினை எடுத்து தம்ளரில் வார்த்து அவரிடம் நீட்டினுள்.

அவர் வாங்கி ஆவலோடு அருந்திஞர். அவரால் இலேசாக விழுங்கமுடியவில்லை. என்ன நடந்தது? தொண்டையைத் தடவிவிட்டுக்கொண்டார்.

''என்னப்பா?...'' என்று பதறிப்போய் இராசம்மா கேட்டாள்.

''ஓண்டுமில்லை. விழுங்கிறது கஷ்டமாக இருக்குது. சூடாக்கும்...''

கோப்பியை மெதுவாக அவர் குடித்து முடித்தார்.

இராசம்மா கவலையோடு அவரை அவதானித்தாள்.

(9-ம் பக்கம் பார்க்க)

# பல்சுவை விருந்து

## இடக்கைப் பழக்கம்

ஓவியமேதைகளில் பலர் இடக்கை பழக்கமுடையவர்கள். மொடேர்ன் ஆர்ட் எனப்படும் நவீன ஓவியங்களை தீட்டுவதில் உலகப் புகழ்பெற்ற ஓவியர் பாபிலோ பிகாஸோ ஓர் இடக்கைகாரர். மற்றும் உலகம் புகழும் அழகி மோனலிசா ஓவியத்தை லியோர்னர் டோடா வின்சி தனது இடக்கையாலேயே தீட்டினர்.

ஃ ஃ ஃ

## தங்கப் பைத்தியம்

ட்ரேக்பொஹிமியாவைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் மாச்லர் என்பவர் உலகிலேயே விசித்திரமான பைத்தியமாக இருந்தார். தினமும் ஒரு தங்க நாணயம் வீதம் 17 ஆண்டுகள் வரை தொடர்ந்து விழுங்கினராம். அவ்வளவு தங்க நாணங்களும் வயிற்றில்போய் என்ன செய்ததோ?

## ஒரே வழி!

அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் தமது உயிலில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தாராம்.

நான் இறந்த பிறகு ஹர்வார்ட் பல்கலைக் கழகத்திற்கு எனது உடலை, விஞ்ஞான ஆராய்ச்சிக்காக ஒப்படைத்துவிடவும். ஏனெனில் நான் படிக்கும் காலத்தில் என் பெற்ருேர் என்னை அங்கு அனுப்புவதற்கு படாதபாடுபட்டார்கள். நான் அங்கு செல்வதற்கு ஒரே வழி இதுதான்.

### பிரிந்துபோகும் உயிர்

மனிதன் இறக்கும்போது அவன் உடலிலிருந்து உயிர் பிரிந்து போகிறது என்பதைக் கண்டுபிடிப்பவர்களுக்கு 15,00,000 ரூபாய் பரிசு கொடுக்கும்படி ஓர் அமெரிக்க பணக்காரர் உயில் எழுதிவைத்துவிட்டு இறந்து போனர். மனிதன் இறக்கும்போது உயிர் தனியாக பிரிந்து செல்கிறது என்பதை 8 விஞ்ஞான ஆராய்ச்சிகூடங்கள் கண்டுபிடித்துள்ளன.

## மரச்சிறை

கிரீசைச் சேர்ந்த ஜாண்டி தீவில் 52 அடி சுற்றளவுள்ள ஒரு பிரமாண்டமான மரம் இருந்தது இதன் தண்டின் உட்பாகம் குகைபோல இருக்கும். கதவுபோன்ற சிறு பிளவுமிருந்தது. 1791 முதல் 1821 வரை 30 வருட காலத்திற்கு இதுவே ஸ்தல சிறையாக இருந்துவந்தது.

## குரைக்காத நாய்கள்

ஆஸ்திரேலியாவில் டிங்காய் என்று ஒரு வகைக் காட்டுநாய்கள் இருக்கின்றன. இந்நாய்கள் குரைப்பதில்லை.

## கவிஞரின் காதல்

ஆங்கில கவிஞரான ஸெல்லி ஒரு காதல் வீரர். இவர் ஹாரிய குருவ், வெஸட்புருக், மேரி எமிலியா ஆகிய நான்கு பெண்களைக் காதலித்தார். இவர்களுள் மூன்ருவது பெண்ணை 'மட்டும் மணந்தார். ஒவ்வொரு காதலும் தோல்வியடைய அடுத்து அடுத்து காதலித்து ஒவ்வொருவரையும் பிரிந்தார் ஒரே நேரத்தில் அல்ல.

ஃ ஃ ஃ

### வண்டுகளில் 2,500,000 வகை

உலகில் பூனைகளில் 40 வகைகள் இருக்கின்றன. பச்சோந்திகளில் 80 வகைகள் இருக்கின்றன. கடல் ஆமைகளில் 200 வகைகள் இருக்கின்றன. கிளிகளில் 300 வகைகள் இருக்கின்றன. தேள்களில் 500வகைகள் இருக்கின்றன. தவளைகளில் 2500 வகைகள் இருக்கின்றன. பறவைகளில் 9000 வகைகள் இருககின்றன. மீன்களில் 14,000 வகைகள் இருக்கின்றன. வண்டுகளில் 2,50,000 வகைகள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

## தலைவலிக்கு மருந்து

அமெரிக்காவைச் சேர்ந்த 'கெட்குகி' என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர்கள் தலைவலி ஏற்பட்டதும். பாம்பின் செட்டையை தலையை கட்டி சுற்றிக்கொள்வதன் மூலம் குணப்படுத்துகிருர்கள்.

## பிள்ளைகளை விற்ருராம்

இந்தியாவில் அஸ்ஸாமில் வறுமையால் ஒரு தகப்பனர் தன்னுடைய இரு புதல்விகளையும் ஒரு மகனையும் விலைக்கு விற்ருர். மூத்தபெண்ணை 200 ரூபாவுக்கும், இளைய பெண்ணை 120 ரூபாவுக்கும், மகனை 110 ரூபாவுக்கும் விற்ருர். இந்த நிகழ்ச்சி 1966ம் ஆண்டில் நடந்துள்ளது.

ஃ ஃ ஃ

### பூச்சிக்கு மரண தண்டனை

பூச்சியின் மீது வழக்குத் தொடர்ந்து அதற்கு தண்டனையும் விதித்த அதிசயமான சம்பவம் 1540ம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டில் நடைபெற்றது.

பத்தாயிரம் ரூபா மதிப்புள்ள துணியை கடித்து நாசப்படுத்திவிட்டதாக ஒரு பூச்சியின் மேல் குற்றம் சுமத்தி விசாரணை நடத்தினர்கள். முதலில் அந்தப் பூச்சிக்கு மரண தண்டனை விதிற்ததுடன் அதன் வர்க்கமே நாடு கடத்தப்பட்டது.

# ஞாயிறு மஞ்சரி.

## வாழ முடியாதா?

உணவு, உடை, உறைவிடம் இல்லை என்ருல் வாழ முடியாதுதான். ஆனல் பவுடரும் சினேவும் இல்லாவிட்டால் வாழ முடியாதா? ஆடம்பர வாழ்க்கையை அகற்ற வேண்டும்.

— வாரியார்

## தங்க ரதத்தில்

மாவீரர் அலெக்ஸாண்டர் இறந்தபோது 64 குதிரைகள் பூட்டப்பட்ட தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அவரது சடலம் பாபிலோனியாவிலிருந்து அலெக்ஸான்டிரியாவுக்கு கொண்டுவரப்பட்டது. இவற்றிற்கு இடையே உள்ள தூரம் 1000 மைல்கள். இதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 60 கோடி ரூபாவாகும்.

ஃ ஃ ஃ

### அதிகநேரம் 'டைப்' அடித்தார்

இங்கிலாந்தில் கிரின்பீல்டை சேர்ந்த 23 வயது அலுவலக ஊழியர் மைக்ஹோவேல் உலகிலேயே அதிகநேரம் டைப் அடித்து உலகசாதனையை ஏற்படுத்தியவராவர். ஓயாமல் தொடர்ந்து 120 மணி 15நிமிடங்கள் டைப் அடித்து இந்த சாதனையை ஏற்படுத்தியிருக்கிருர். இவர் ஒரு பிறவிக் குருடர்.

ஃ ஃ ஃ

## படத்தில் 71 பாடல்கள்

சினிமாவின் ஆரம்ப காலத்தில் 'இந்திர சபா' என்ற ஒரு படம் வெளிவந்தது. இந்தப் படத்தில் 71 பாடல்கள் இடம் பெற்று இருந்தன.

## கருநாகத்தை கடித்துக் கொன்ற இரண்டு வயதுக் குழந்தை!

இந்தியாவைச் சேர்ந்த யவத்மால் என்ற இடத்தில் கருநாகம் ஒன்றை இரண்டு வயது பெண் குழந்தை கடித்து சாகடித்தது. குழந்தை பாம்பை கடித்து சாகடித்ததை அவளின் பெற்ருேர்கூடப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

குழந்தையின் பெயர் சோனல். பாபுசாஹேப் குருள்வார் என்பவரின் மகள். குழந்தை தனது வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது ஒரு கருநாகம் படம் எடுத்து ஆடிக்கொண்டிருந்தது. குழந்தை பாம்பைப் பிடித்து அதன் வால் பகுதியை வாய்க்குள் வைத்துக் கடித்தாள். பெற்ருேர் இதனைப் பார்த்து பதைபதைத்துப் போய் பாம்பிடமிருந்து குழந்தையை விடுவிக்க முயன்றனர். பாம்பின் வால் குழந்தையின் வாயில் இருந்து எடுத்தபோது பாம்பு இறந்துக்கிடந்தது. குழந்தைக்கு எதுவும் நடக்கவில்லை. சுகமாக இருந்தாள்.

## மீன் அசைவமா?

மீன் சைவ உணவா? அசைவ உணவா? மேற்கு வங்காளத்திலுள்ள மக்கள் மீனைச் சைவ உணவாக நினைத்துச் சாப்பிடுகிருர்கள்: ஆனல் இந்தியாவில் மற்றப்பகுதிகளிலுள்ள மக்கள் மீனை அசைவ உணவாகவே நினைக்கிருர்கள்.

## பகல் கனவு

பகல்கனவு காணுத மனிதர்கள் இல்லை. ஒவ்வொருவரும், பகலில் ஏறக்குறைய 90 நிமிடங்களுக்கு ஒருமுறை பகல் கனவு காண்பதாக மனஇயல் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிருர்கள்.

ஃ ஃ ஃ

## எலிகள்

இந்தியாவில் 285 கோடி எலிகள் இருக்கின்றன, இது இந்தியா மக்கள் தொகையை விட ஆறு மடங்குக்குசற்றுஅதிகம். இந்த எலிகள் ஆண்டுக்கு 1000கோடி மதிப்புள்ள உணவு தானியங்களை அழித்துவிடுகின்றன.

ஃ ஃ ஃ

## பராசூட்டில்

முதன் முதலில் பராசூட்டில் வெற்றியோடு இறங்கி அதற்கு வழிவகுத்துக்காட்டிய பெருமை ஆண்ட்கே கார்னரின் என்ற பிரஞ்சுக்காரரையே சாரும். இவர் 1797ம் ஆண்டில் பாரிஸ் நகரின் மீது பெரிய பலூனைப்பிடித்தவாறு இறக்கி முதலில் சாதனை புரிந்தார்.

## இவை வடமொழி எழுத்தல்ல

ஜ, ஸ, ஹ, ஷ ஆகியவை வடமொழி எழுத்துக்கள் என்று கற்றுத்தரப்படுகிறது. ஆனல் இவை உண்மையில் வட கொழி எழுத்துக்கள் அல்ல. வடமொழியில் இந்த எழுத்துக்கள் இடம்பெறவில்லை. தமிழனே இவற்றை கண்டுபிடித்து எழுதியிருக்கிருன்—இதனை 1982ல் தமிழ் நாடு கல்விஅமைச்சராக இருந்த திரு. அரங்கநாயகம் கூறியிருக்கிருர்.

## 1700 அடி ஆழத்தில் நீர்!

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலம்தான் அதிக வரட்சியானது. இங்குள்ள சில பகுதிகளில் கிணறுகள் 700 அடி ஆழம் வரை வெட்டப்படுகிறது. அப்படியிருந்தும் 4 அல்லது 5 அடிக்கு மட்டும் தான் நீர் கிடைக்கும். அதுவும் கோடை காலத்தில் இல்லை.

## அதிசயப் பறவை

கோல்டன் பிளவர் என்ற ஒருவகை பறவை இருக்கிறது. இந்தப்பறவை மிகவேகமாக பறக்கக்கூடியது இந்தப்பறவை தென் அமெரிக்காவுக்கும் நோவாஸ்கட்டியாவுக்கும் இடைப்பட்ட 2,400 மைல் தூரத்தை 48 மணிநேரத்தில் கடந்துவிடுகிறது.

ஃ ஃ ஃ

## கழுதை

ஜான்வில்னர் என்பவர் அமெரிக்க குத்துச்சண்டை வீரர். இவருடன், மேடையில் மோதுவது மனிதரல்ல. ஒரு கழுதை. இந்தக்கழுதை தனது முன்கால்களாலும் பின்கால்களாலும் உதைத்து இவருடன் சண்டைபோடுவது ரகிக்கத்தக்க காட்சியாகும்.

## அரசன் விரும்பிய ஆண் குழந்தை!

யுங்செங் என்ற மன்னன் (1677 — 1736) சீனவை ஆண்டுகொண்டிருந்தபோது நியுஹீலு என்பவள் அவனுடைய மனைவியாக இருந்தாள். அவள் தனக்கு ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றுத்தரவேண்டும் என்றும் இல்லாவிட்டால் அவளைக் கொன்றுவிடப் போவதாகவும் அரசன் கூறிக்கொண்டிந்தான்.

நாளடைவில் அவள் ஒரு குழந்தையை பெற்றெடுத்தாள். ஆனல் அதுவோ பெண் குழந்தையாக இருந்தது. உயிர் போய்விடுமே எனப்பயந்து அவள் அதே தினத்தில் வேருெரு அதிகாரிக்கு பிறந்த ஆண்குழந்தையை தான் வாங்கிக்கொண்டு பெண் குழந்தையை அதிகாரிக்குக் கொடுத்துவிட்டாள். நடந்ததை அறியாத மன்னன் தனக்கு மகன் பிறந்ததை கோலாகலமாகக் கொண்டாடினன். அவனுக்கு யுங்செங் எனப் பெயரிட்டான். தந்தைக்குப் பிறகு யுங்செங் பட்டத்திற்கு வந்து 60 வருட காலம் ஆண்டான். சீன சரித்திரத்திரததில் பொற்காலமென போற்றப்படுவது அவன் ஆண்ட காலம். அவ்வளவு பரந்த நிலப்பரப்பும் மக்கள் தொகையும் கொண்டதாக சீன எப்போதுமே இருந்ததில்லை. மிகச் சிறந்த அறிவாளியாக திகழ்ந்த மன்னன் ஒரு புகழ்பெற்ற கலைஞனும் ஆவான். 33960 கவிதைகள் அவனல் எழுதப்பட்டன.

## 'இருபது வருடங்கள் ரயிலைவிட்டு இறங்கவில்லை'

**1950-ம்** ஆண்டு ரயிலில் முதல்முதலாக ஏறிய ஒருவன் இறக்கும்வரை அதைவிட்டு இறங்கவில்லை. அவன் பெயர் ஸ்பிரான்சிஸ் கோடி அயோலா. இவன் இத்தாலியப் பாராளுமன்ற உறுப்பினரானதால் நகரெங்கும் ரயிலில் செல்ல அனுமதி பெற்றிருந்தான். 1970-ம் ஆண்டு இறந்த இவன் 20 வருடங்கள் விடாமல் பயணம் செய்த மொத்த தூரம் 3,600,000 மைல்கள். இவன் தன் வாழ்நாளில் 7200 இரவுகளை ரயிலில் கழித்திருக்கிருன். ஆனலும் ரயிலில் தூங்கும் வசதிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை உபயோகிக்காமல் உட்கார்ந்தபடியே முதலாம் வகுப்பில் பயணம் செய்தான். இறக்கும்போது ரயிலிலேயே உயிர்விட்டான்.

## சிறுகதை

# தடயங்கள்

## இரா. சம்பந்தன்

'உண்மையான குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதனால் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட வேலுப்பிள்ளை முருகானந்தம் நிரபராதி எனக் கண்டு அவரை விடுதலை செய்கிறேன்.'

ஒன்பது மாதங்களாக கோடும் வீடும் என்று அலைந்துகொண்டிருந்த சிவகாமி கணவனை நிமிர்ந்து பார்த்தாள். நான்கு முழ அதே வேட்டி ஒரு வருடமாகக் காசு சேர்த்து வாங்கிய வெள்ளைச் சேட்டு. அதுகூட சிறைச்சாலைத் தண்ணீரிலே தோய்க்கப்பட்டு மங்கலாக இருந்தது. கைகளை மார்போடு கட்டிக்கொண்டு நீதிமன்றக் கூண்டுக்குள் நின்றான் முருகானந்தம். சிவகாமி பார்வையை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டாள். ஒன்பது மாதங்களாக மனதுக்குள்ளே மட்டும் எரிந்த நெருப்பு இன்றோ தேகமெல்லாம் எரிந்தது.

முருகானந்தம் அவளுக்குச் சொந்த மச்சான்தான். உலகம் மாப்பிள்ளை தராது என்று தெரிந்துகொண்டு வசதியற்றவர்கள் கௌரவமாக நடத்திக்கொள்கின்ற சொந்தத் திருமண முறையிலேதான் சிவகாமிக்கும் திருமணம் நடந்தது. முருகானந்தம் சுருட்டு வேலைக்குச் செல்பவன். கொழும்புக் கடைகள் எரிந்தால் அந்த வேலைகூட ஒழுங்காக நடக்காது. அப்போதெல்லாம் தோட்டங்களில் கூலிவேலைக்கும் போவான். அவனுடன் கூடி வாழ்ந்த நான்கு வருடங்களில் மூன்று குழந்தைகளைத்தான் சொத்தாகக் கண்டாள் சிவகாமி.

ஓலைக்குடிசை; இடையிடையே பிள்ளைகள் கிள்ளியெடுத்த மண் சுவர்; அதற்கு மேலே ஓலைத்தட்டி என்று அவள் வீடு காட்சியளிக்கும். அதற்கு விட்டுக்கொடாதவளாக அவளும் கிழிந்துபோன சேலை; மண்ணிறச் சட்டை போன்றவற்றையே அணிந்திருப்பாள். அவளுக்கு வீட்டு வேலைகள் குறைவு. சமையல்கூட அதிக நேரமாகாது. அதிக நேரம் சமையலில் ஈடுபட அவளிடம் எதுவும் இருப்பதில்லை. ஒரு கறியும் சோறும் மத்தியானம் சமைப்பாள். பகலும் இரவும் சாப்பிட்டு விடியக் குழந்தைகளுக்கும் மீதியிருக்கும்.


கணவனையும் அழைத்துக்கொண்டு நீதிமன்ற வளவை விட்டுப் புறப்பட்டாள் சிவகாமி. 'சிவகாமி! சுப்பிரமணியர் என்னைக் கைவிடமாட்டார் பார்த்தியா? உண்மையான கள்ளனைப் பிடித்துத்தானே குடுத்தவர்' முருகானந்தம் கூறுவது அவளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது. மௌனமாக நடந்தாள். 'என்ன சிவகாமி பேசாமல் வாறாய்? ஒரு கட்டி கற்பூரம் வாங்கிக் கொளுத்திப்போட்டு போவம்.'

''உங்கன்ரை சுப்பிரமணியரும் கந்தசாமியும். கடவுளுக்கு இரக்கம் இருந்தால் எங்களுக்கேன் இந்தப் பாடு?'' அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. ஒன்பது மாதங்களாக பிள்ளைகளும் தானும் அரை வயிறு உண்டு சீரழிந்ததையே அவள் எண்ணிக்கொண்டு நடந்தாள். ஆசையோடு வளர்த்த ஆட்டுக்குட்டியொன்றை விற்று ஒருவாறு குடும்பத்தைக் காப்பாற்றியும் முடியாதுபோகவே முருகானந்தத்தின் ஒரேஒரு சொத்தான சைக்கிளையும் விற்றாள்.

பஸ் நிலையத்தை அவர்கள் அடைந்துவிட்டார்கள். பெருந்தொகையான பிரயாணிகள் முட்டி மோதிக்கொண்டு நடந்தார்கள். அரசாங்க பஸ்சும் மினி பஸ்சும் என்று ஒரே அமர்க்களம். வாகனப் போக்குவரத்து இலகுவாக பஸ் நிலைய முன் வீதியின் நடுவே நீண்ட சீமெந்து வரம்புகளை அமைத்திருந்தார்கள். அதில் இரு பொலிஸ்காரர்கள் கடலைப் பைகளில் கடலைகளை எடுத்து உண்டபடி நின்றார்கள். அவர்களைக் கண்டவுடன் சிவகாமிக்கு என்னவோ செய்தது. செய்யாத குற்றத்துக்காக அவரை......செய்யாத குற்றம். வேதனைத் திரையிலே கடந்தகால நினைவுகள் படமாக விழுகின்றன.

★

'தங்கச்சி! இவ்வளவு காலமும் நீ வாங்கின பொருட்களுக்கு காசு தராவிட்டாலும் பரவாயில்லை. இனிமேல் கடனென்று வந்து எதுவும் கேளாதே? என்னை கடை நடத்த விடம்மா.'



பசியால் அழுதுகொண்டிருந்த பிள்ளைகளுக்குப் பாணாவது வாங்கிக் கொடுக்கலாம் என்ற எண்ணத்துடன் சென்ற சிவகாமிக்கு கடையில் இந்த வார்த்தைகளே பரிசாகக் கிடைத்தன. பலருக்கு முன்னால் கடைக்காரன் சொன்ன வார்த்தைகள் இதயத்தைப் பிழிய திரும்பி நடந்தாள் அவள். உடம்பிலே சேலையில்லாததுபோல ஒரு உணர்வு. எப்போ கணவன் வருவான் என்று காத்துக் கிடந்தாள் சிவகாமி.

அன்று தோட்டமொன்றிலே குழை தாழ்க்கும் வேலை இருந்தால் மாலைப்பொழுதில்தான் வீட்டுக்கு வந்தான் முருகானந்தம். அவன் தேர்த் திருவிழாவுக்கு விரதம் ஆகையால் பசி வேறு.

'வாழுறது என்றால் மானம் மரியாதையோடு வாழவேணும். இல்லாவிட்டால் சாகவேணும். கடைக்காரன் சாமான் இல்லையென்று சொல்லிப்போட்டான். இன்றைக்குப் பொழுதுபடுறத்துக்குள்ளே அவன்ரை காசைக் குடுக்கவேணும். போங்கோ... போய் சுருட்டு முதலாளியிட்டைக் காசு வாங்கிக் கொண்டு வாங்கோ.'

சிவகாமி சீறிவிழுந்தாள். அவள்மானத்தைப்பார்ப்பவள் 'மற்றவர்களிடம் அடிமைப்படாமல் கூலிவேலை செய்தாவது நீங்கள் உழைத்தாலும் உங்களோடுவாழத்தயார் ' திருமணத்துக்கு முன்னர் அவள் அடிக்கடி கூறிக்கொள்வாள். பணம் காசு இல்லையென்றால் பட்டினி கிடப்பாளே ஒழிய அடுத்த வீடு அயல்வீடு என்று போய் உப்புக்கட்டி கூடக் கேட்கமாட்டாள். அவளின் குணம் முருகானந்தத்துக்கும் தெரியும்.

'சிவகாமி இன்று நல்லூர் தேரல்லே. சுவாமி தேராலே இறங்குவது பார்க்க முதலாளி கோயில்லே தான் நிற்பார். எதுக்கும் நான் கோயிலுக்குப் போட்டு, அதாலே முதலாளியையும் பார்த்துக்கொண்டு வாறன். இந்தா மரக்கறி, அரிசி, கெதியா சமை. பசி கண்ணை இருட்டுது.' வழக்கம்போல ஓலைப் பையையும் அரிசியையும் மரக்கறியையும் அடுப்படி வாசல்லே வைத்துவிட்டு குளிக்கச் சென்றான் முருகானந்தம்.

அவனுக்காகக் காலையிலே அவள் தோய்த்துப் போட்டிருந்த வேட்டியை எடுத்துக் கொடுத்தாள். எத்தனையோ தடவைகள் தோய்த்தும் மண்ணிறம் போகாமலே இருந்தது. இறங்குப்பெட்டியில் திரட்டி வைத்திருந்த அந்தச் சருகைச் சால்வையையும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டான் முருகானந்தம்.

கந்தையுடையோடு செல்லும் கணவனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் சிவகாமி. மரக்கறி வந்தாச்சு. இனியவள் விறகு தேடவேணும். வேலியைப் பிய்த்து எரித்து: வீட்டுக் கூரையின் தாழ்வாரக் கிடுகுகளைப்பிடுங்கி எர்த்து வளைகளும் வெளியே தெரிகின்றன. எங்காவது திரிந்து விறகு பொறுக்கவேண்டும், அதற்குள் மனுசன் வந்துடப் போவுது.

ஒருவாறு சமையலை முடித்துக்கொண்டு அடுப்படியைக் கூட்டி ஒதுக்கிக்கொண்டிருந்தாள் சிவகாமி.

'சிவகாமி யக்கா! சிவகாமி யக்கா! ஓடிவாங்கோ ஒரு கதை.' பக்கத்து வீட்டுத்திருச்செல்வம் அவசரமாகக் கூப்பிட்டான். சோற்றுப்பானையை அகப்பையின் அடிக்காம்பால் கிளறிவிட்டவள் 'என்ன செல்வம்?' வேலிப் பொட்டுக்கால் குனிந்து கேட்டாள்.

'உங்களின்ரை ஆனந்தண்ணையைப் பொலிஸ் பிடிச்சுக் கொண்டுபோவுது. கோயிலலை ஆற்றையோ பொம்பிளையின்ரை தாலிக்கொடியை அறுத்துப்போட்டாராம். கத்தக் கத்த நல்ல அடி.'

திருச்செல்வம் கூறிவிட்டு வாழையிலை வெட்டிக் கொண்டு சாப்பிட ஓடினான். ஒரு கணம் நடுங்கிப்போனாள் சிவகாமி. முருகானந்தத்தைப் பொலிஸ் பிடித்ததோ தாலிக்கொடி யறுத்த கதையோ அவளின் நினைவுக்கு எடுபடவில்லை. 'கத்தக் கத்த நல்ல அடி' திருச்செல்வத்தின் அந்தச் சொல்லுத்தான் அவளின் இதயச்சுவரெல்லாம்இடித்தது.

பொலிஸ் நிலையச் சிறைக் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தான் முருகானந்தம். சீமெந்துத் தரையிலே முழங்கால்கள் இரண்டையும் கட்டிக்கொண்டு குனிந்த தலையுடன் இருந்தான் முருகானந்தம். கம்பிக்கு வெளியே நின்று 'என்னப்பா நடந்தது'?'

ஓலமிடத் தொடங்கிய சிவகாமியை 'இந்தாம்மா இங்கே நின்று சத்தம் போட்டால் அவனைப் பார்க்க விடமாட்டேன். ஏதாவது கதைக்க இருந்தால் கெதியாய்க்கதைச்சுப் போட்டு வெளியே போ' பொலிஸ்காரர் ஒருவரின் வார்த்தைகள் மௌனமாக்கின. கணவனைப் பார்ப்பதற்கு அவள் உள்ளே வரப் பட்டபாடு அவளுக்குத்தான் தெரியும்.

'சிவகாமி! நான் சுவாமி இறங்குவதைப் பார்த்துக்கொண்டு நின்றனான். ஐயர் தீபங் காட்டிற நேரத்திலே ஒரே இரைச்சல். அந்தச் சமயம் பார்த்து ஆரோ, ஒரு பொம்பிளை மனுசியின்ரை தாலிக்கொடியை அறுத்துப் போட்டான். அந்த மனுசி கத்தின சத்தம் கேட்டுத்தான் நான் திரும்பிப் பார்த்தனான். இவையள் நான்தான் தாலிக்கொடி அறுத்தனான் என்று சொல்லி என்னை அடைச்சு வைச்சிருக்கினம். என்னை அடிக்கினம் சிவகாமி. உடம்பெல்லாம் நோகுது. என்னைக் கூட்டிக்கொண்டு போ. என்னை விட்டுட்டுப் போகாதே சிவகாமி.'

முருகானந்தம் அழுது கொண்டு கூறினான். அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிறைக் கம்பிகளில் தலையை மோதி மோதி அழுதாள் சிவகாமி. அதற்குள் அவள் வெளியேற்றப் பட்டும் விட்டாள்.

★

காற்றின் தழுவலுக்கு இடங்கொடுக்க விரும்பாத கைவிளக்கு அடிக்கடி தற்கொலை செய்துகொள்கிறது. திரும்பவும் அதை ஏற்றி வைத்துவிட்டு திண்ணை மூலையில் வந்து அமர்கிறாள் சிவகாமி.

'அப்பா எங்கே அம்மா?' கேள்வி ஓய்ந்து குழந்தைகளும் உறங்கிவிட்டார்கள். இன்றோடு எட்டு மாதங்கள்... இருநூற்று நாற்பது நாள்... சிவகாமின் சிந்தனைகள் தொடர்கின்றன.

'சிவகாமியக்கா! அருளம்பல மாஸ்ரரின்ரை குமாரைப் பொலிஸ் பிடிச்சுக்கொண்டு போவுது. வாத்தியார் மாமி கத்துறா, கன சனம். நீங்கள் போய்ப் பார்க்கேல்லையே!' கூறிவிட்டு ஓடினான் திருச்செல்வம். சிவகாமி அசையவேயில்லை.

எங்களுக்குத்தான் இந்தத் தொல்லையென்றால் அந்தப் பிள்ளைக்கு என்ன வந்துதோ? பாவம். கண்டலை படிச்சுப் போட்டு இடையிலே படிப்பும் குழப்பிப் போய் வந்து நிற்குது.

சிவகாமியின் சிந்தனையைத் திருச்செல்வத்தின் அம்மா குழப்பினாள். 'சிவகாமி; கேட்டியேடி கதையை. தேரிலன்று தாலிக்கொடி அறுத்தது ஆனந்தம் இல்லை. அருளம்பலத்தான்ரை குமாராம் அறுத்தது. வித்தவனையும் வாங்கினவனையும் பொலிஸ் பிடிச்சுப்போட்டுது. வெளிநாட்டுக்குப் போக காசில்லை எண்டு அறுத்ததாம் பொடியன். பார்த்தியே பொடியன்ரை வேலையை. உலகத்திலை ஆரை நம்புறது. என்ரை பொடியனும் வீட்டிலை நிற்குது. கதவிலை துறப்பு. நான் போட்டுவாறன்.' திருச்செல்வத்தின் அம்மா சொல்லிவிட்டு வேகமாக நடந்தாள்.

உலகமே விடிந்ததுபோல இருந்தது சிவகாமிக்கு. இவ்

(9-ம் பக்கம் பார்க்க)

## ருசியான மைனா!

மனைவியைப் பிரிந்து பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்தார் கணவர். மனைவியின் பிறந்தநாள் வந்தது.

அதற்காக அந்தக் கணவர் 500 ரூபா கொடுத்து 11 மொழிகள் பேசும் ஒரு அழகிய மைனாக் குருவியை வாங்கி அதை பிறந்தாள் பரிசாக மனைவிக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு ஒரு நாள் தொலைபேசி முலம் மனைவியிடம் இப்படிக் கேட்டார்.

''நான் அனுப்பிய மைனாக் குருவி எப்படி இருந்தது?''

''மிகவும் சுவையாக இநந்தது. கோழிக்கறியை விட மிக ருசி என்றால் தெரிந்துகொள்ளுங்களேன்''— என்றாள் மனைவி.

'அந்தக் கணவனுக்கு மயக்கம் வந்துவிட்டது.'

— தனு

# தீமை செய்தால் தீமையே கிடைக்கும்

ஒரு முயலும், ஒரு குரங்கும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் உணவுப் பொருட்களைக்கொண்ட பார்சல் ஒன்றைக் கண்டன. முயலும், குரங்கும் அதனை எடுத்துதனியானஇடத்திற்குச் கொண்டுசென்றன முயலிடம் குரங்கு யாரும் வருகிறார்களா? என்று பார்க்கும்படி கூறியது. முயல் அப்பால் செல்ல, குரங்கு பார்சலுடன் மரத்தில் ஏற்றிக்கொண்டது. முயல் வந்து உணவைக் கேட்க, குரங்கு சிரித்துக் கொண்டு தன் வயிற்றைக் காட்டியது.

குரங்கால் ஏமாற்றப்பட்ட முயல், அரசனிடம் சென்று முறையிட்டது. அரசன் நிறைய வெகுமதிகள் கொடுத்து அனுப்பினான். இந்த வெகுமதிகளைப் பார்த்த குரங்கு இது எப்படி கிடைத்தது? என்று கேட்டது.

''தான் அரச சபைக்குச் சென்று இருந்தபோது பெரியார்கள் அரசர் நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்தினார்கள் என்றும் அப்போது தான் பலமாகத் தும்மியதாகவும் உடனே அரசர் அழைத்து இந்த வெகுமதிகளைத் தந்தார்'' என்றும் முயல் கூறியது.

இதைக் கேட்ட குரங்கு நேரே அரச சபைக்குச் சென்றது. பெரியார்கள் அரசனை வாழ்த்திய சமயம் குரங்கு இரு தடவை தும்மியது. உடனே யார் தும்மியது? என்று அரசன் கேட்டான்.

அரசன் தனக்கு வெகுமதி தரப்போகிறார் என நினைத்து முன்னே சென்று நான்தான் தும்மியது' என்று குரங்குகூறியதுஉடனேஅரசன் காவலாளர்களை அழைத்து குரங்கை சிறையில் இரு நாட்கள் அடைக்கும்படி உத்தரவிட்டான். குரங்கு சிறையில் உணவில்லாமல் வாடியது. நண்பனுக்கு துரோகம் செய்தபடியால் இந்த நிலை ஏற்பட்டது.

**சி. பேரின்பராசா,**
பேராறு பரமேஸ்வரா மகாவித்தியாலயம்,
கந்தளாய்.

## உலகில் மிகப்பெரியன'

| | | |
|---|---|---|
| கண்டம் | — | ஆசியா |
| தீவு | — | கிறீன்லாந்து |
| தேவாலயம் | — | சென்பீற்றஸ் |
| நூலகம் | — | லெனின் தேசிய நூலகம் |
| பெரியநதி | — | அமேசன் நதி |
| நீளமான நதி | — | மிசூறி மிசிசிப்பி |
| மணிக்கூடு | — | கால்கெட் |
| சிகரம் | — | எவரெஸ்ட் |
| ஏரி | — | டிட்டிக்கா ஏரி |

**கந்தையா முகுந்தன்**
டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

# மாணவர் மன்றம்

## தெரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவின் முன்னைய தலைநகரம்?—கல்கத்தா.

'சோக்ரதர்' என்ற நூலை எழுதியவர் யார்? —ராஜாஜி.

ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி யார்?—ஜோர்ஜ் வாஷிங்டன். (1732-1799)

உலகின் உயர்ந்த அணைக்கட்டுளது;-கூவர்டாம். (அமெரிக்காவிலுள்ளது 726 அடி)

உலக சுகாதார ஸ்தாபனம் எங்கிருக்கிறது? — ஜெனிவாவில்.

கழுகுச் சின்னங்கள் கொண்ட இரு நாடுகள் எவை? — எகிப்து, ஐக்கிய அமெரிக்கா.

**—சா. ஹ. சிபாயா பேகம்,**
மஹமுட்பாலிகா
மகளிர் வித்தியாலயம்,
கல்முனை.

1. இலங்கையின் தேசியக் கொடி போல் வேறு எங்குள்ளது?
2. கனடாநாட்டின் தேசியக் கொடியின் சின்னம் என்ன?
3. வயிற்றில் பை இல்லாத இனம் எது:
4. ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் அதிக தங்கப்பதக்கங்களைப் பெற்ற நாடு எது?
5. ''தீபெத்', நாட்டின் தலைநகரம் எது?
6. ஒரு ஆண்டின் நடுப்பட்ட நாள் எது?
7. ஜப்பான் நாட்டின் நாணயத்தின் பெயரென்ன?
8. 'பவுண்டன் பேனைவை' கண்டு பிடித்தவர் யார்?
9. அசுகசோபிக்கமிலம்எது?
10. ஏறுவதெல்லாம் இறங்கும்; ஆனால் ஏறினால் இறங்காது அது எது?

**விடைகள்**

1. ஈரான்.
2. வாத்து.
3. ஆண் கங்காரு.
4. சீனு
5. இலாசா.
6. யூலை—2
7. யென்.
8. வோல்டர்மார்க்.
9. உயிர்ச்சத்து—சி.
10. வயது.

தொகுப்பு:-

**நாகமணி மகேந்திரலிங்கம்**
சங்கானை.

## உங்களுக்குத் தெரியுமா?

உலகத்தில் மிகப் பெரிய நூலகம் எது?— யுனைட்டெட் ஸ்டேட்ஸ் லைபிறறி ஒவ் காங்கிரஸ்.

உலகத்தின் தென் துருவத்திற்குச் சென்ற முதல் மனிதன் யார்?—ஆமாண்ட்சன்.

யப்பானிய மல்யுத்தத்தின் பெயர் யாது?—''யுடு''

உலகின் எரிமலைகளில் மிகப் பெரியது எங்குள்ளது? யப்பானில், அதன் பெயர்? மியூஜிமலை.

உலகில் மிக உயரமான பறவை எது? — தீக்கோழி.

முதன் முதலில் கப்பலில் உலகைச் சுற்றிவந்தவர் யார்? போர்த்துக்கேயரான மகலன்.

உலகத்தின் மிகப் பெரிய சிகரம்? எவரெஸ்ட் சிகரம்.

உலகில் மிகப்பெரிய விலங்கு எது? நீலத் திமிங்கிலம்.

முதன் முதல் மொழியை இயற்றிய நாடு எது? சீனு.

கல்குலேற்றரைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்? பாஸ்கல்.

**—க. சுதேசன்,**
சேர். வைத்திலிங்கம் துரை சுவாமி மத்திய மகா வித்தியாலயம்,
வேலணை.

## கண்டுபிடித்தவர்

| | | |
|---|---|---|
| வடதுருவம் | — | பிரி |
| தென்துருவம் | — | அமஸ்ஜன் |
| வடதென்காந்த துருவங்கள் | — | உரோஸ் |
| கபிசன்குடா | — | கட்சன் |
| நியூபவுண்லாந்து | — | கபொட் |
| நியூசிலாந்து | — | கப்டின்குக் |
| அமெரிக்கா | — | கொலம்பஸ் |
| தஸ்மேனியா | — | தஸ்மன் |
| பேரு | — | பிகாரோ |
| குடாநிரோட்டம் | — | பிராங்கின் |
| பிலிப்பைன்ஸ் தீவுகள் | — | மக்கல்லன் |
| கிழக்கிந்திய தீவுகள் | — | வாஸ்கொடகாமா |

**செல்வி புருஸா மொகடீன்**
நிந்தாவூர் முஸ்லிம் ம. மா. வித்தியாலயம்,
நிந்தாவூர்.

# மங்கையர் மஞ்சரி

## உள்ளங்களின் ஒருமைப்பாடுதான் குடும்பவாழ்வின் சிறப்பு!

ஒரு கணவனையும் மனைவியையும் மையமாகக் கொண்டு இயங்குகிற ஒரு சமுதாய உறுப்புக்குக் குடும்பம் என்று பெயர்.

எனவே.

கணவன் இல்லாத குடும்பமோ, அல்லது மனைவியில்லாத குடும்பமோ ஒரு முழுமையான குடும்பம் ஆகமாட்டாது.

இதேபோல்,

கணவன் மனைவியரிடையே ஓர் அடிப்படையான அன்புப் பிணைப்பு இல்லாத குடும்பமும் ஒரு சரியான குடும்பம் ஆகமாட்டாது.

அன்புப் பிணைப்பு என்பது இளமைக்காலத்திலே உடல் அழகைக் கருவாகக் கொண்டு உருவாகிறது. பிறகு இளமையும் குன்றி உடல் அழகும் குறைந்து வரும்போது கணவன் மனைவி ஆகியவர்களுடைய உள்ளங்களும் ஒன்றுபட்டு இயங்குகின்ற உறவினல் அந்த அன்புப் பிணைப்பு வலு அடைகிறது.

ஆகையால்,

உடல் அழகைக்காட்டிலும், உள்ளங்களின் ஒருமைப்பாடுதான் குடும்ப வாழ்க்கையின் அடிப்படையான அன்புப் பிணைப்புக்கு இன்றியமையாததாக இருக்கிறது.

உடல் அழகை மட்டுமே பற்றி நிற்கும் அன்புப் பிணைப்பானது, வயதாக வயதாக அந்த உடல் அழகு குறைந்து வரும் அளவுக்குத் தானும் மறைந்து கொண்டே வந்து விடும்.

ஆனல்,

உள்ளத்தின் அழகைப்பற்றி நிற்கும் அன்புப் பிணைப்பு இப்படி அல்ல. கணவனும் மனைவியும் தங்கள் இளமையை இழந்து, குடுகுடு கிழவனும் குடுகுடு கிழவியுமாய் முதிர்ந்து விட்டாலும்கூட, அந்த அன்புப் பிணைப்பு அணுவளவும் தளரமாட்டாது.

உள்ளத்தின் அழகு என்பது என்ன? ஒருவரது சொல்லிலும் செயலிலும் வெளிப்பட்டு விளங்குகிற இனிமையான இயல்புகளே, அவருடைய உள்ளத்திற்கு அழகை ஊட்டுகின்றன. அந்த இனிமையான இயல்புகளுக்கு உரிய கவர்ச்சி சக்தியானது, உலகிலேயே தலைசிறந்த பேரழகிகள் எனப் படுவோரின் உடற் கவர்ச்சியைக்காட்டிலும் ஆற்றல் படைத்தது! அழிவு அற்றது! எனவே,

இன்பமாக இல்லறம்நடத்துவதற்கு ஆசைப்படுகிற கணவன் மனைவியர், தங்கள் உடலைக் கவர்ச்சிகரமாக ஆக்கிக் கொள்வதிலே கவனம் செலுத்துவதைக்காட்டிலும், உள்ளத்தைக் கவர்ச்சிகரம் ஆக்கிக்கொள்வதிலே தான் மிகுதியான கவனம் செலுத்த வேண்டும்.

உள்ளத்தைக் கவர்ச்சிகரம் ஆக்கிக்கொள்வது எப்படி?

நம்முடைய உடலைப் பிறர் தங்கள் கண்ணுல் பார்ப்பது போல், உள்ளத்தைக் கண்ணுல் பார்க்கமுடியாது. அதற்காக, நம் உள்ளத்தின் இயல்பை மற்றவர்களால் அறிந்து கொள்ள இயலாது என்பது அல்ல.

காற்றைக்கூடத்தான் நம் கண்ணுல் பார்க்க இயலாது. எனினும் மரம் செடி கொடிகளில் ஏற்படுகிற அசைவைக் கொண்டு, காற்று எந்தப் பக்கம் வீசுகிறது, எவ்வளவு வேகமாக வீசுகிறது என்பதையெல்லாம் நாம் கண்டுகொள்கிறோம் அல்லவா?

இப்படியே,

நம்முடைய சொற்களைக் கொண்டும். செயல்களைக் கொண்டும், நடை உடைகளைக் கொண்டும், பார்வையைக் கொண்டும், நமது உள்ளத்தின் இயல்பை மற்றவர்களால் எளிதில் புரிந்து கொண்டு விட இயலும்.

எனவே,

நம் உள்ளம் கவர்ச்சி உடையதாய் விளங்கவேண்டுமானல்,

1. நாம் பேசுகிற சொற்கள் இனிமையாக இருக்க வேண்டும்.
2. நம்முடைய செயல்கள் செம்மையாக இருக்கவேண்டும்.
3. நம்முடைய நடையிலே பணிவு இருக்க வேண்டும்.
4. நம்முடைய உடையிலே எளிமை இருக்கவேண்டும்.
5. நம்முடைய பார்வையிலே நேர்மை இருக்கவேண்டும்.
6. நம்முடைய முகபாவங்களிலே உண்மை இருக்கவேண்டும்.

ஒரு கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் இந்த முறையிலே பழகிவருவார்களானல், அவர்களது உள்ளங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து, எவராலும் பிரிக்க முடியாத அளவுக்கு அன்பிலே பிணைந்து நிற்கும். அத்தகைய ஓர் உயரிய இல் வாழ்க்கை அமையப் பெற்றவர்களுக்கு இந்த வையகமே வானுலகமாகக் காட்சியளிக்கும் என்றான் வள்ளுவன்:

நன்றி – கல்கண்டு

சமையல்பாகம்

## பழ அல்வா

தேவையான பொருட்கள்: மாம்பழம் மூன்று. பலாச்சுளை பத்து, வாழைப்பழம் ஆறு, சர்க்கரை 200 கிராம், பால் 200 கிராம், முந்திரிப் பருப்பு ஐந்து, திராட்சைப் பழம் பத்து, ஏலக்காய் மூன்று.

**செய்முறை:**

மாம்பழங்களை கொட்டை, தோல் ஆகியவைகள் இல்லாமல் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ள வேண்டும்.

வாழைப்பழம் பலாச்சுளை ஆகியவற்றையும் துண்டு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவேண்டும்.

பிறகு மூன்று வகையான பழத்துண்டுகளையும் ஒரு பாத்திரத்தில் போட்டு மசித்துப் பிசைந்துவிட வேண்டும். இத்துடன் பாலையும் சர்க்கரையையும் சேர்த்து அடுப்பில் ஏற்றிக் கொதிக்க வைக்கவேண்டும்.

சிறிது நேரமானவுடன் அது கெட்டியாக மாறிவிடும் கிள

(10ம் பக்கம் பார்க்க)

## பாரதியார் பெண்களுக்காக கூறிச்சென்ற சில உண்மைகள்!

- பெண்களை ருதுவாகும் முன் திருமணம் செய்து கொடுக்கக் கூடாது.
- அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.
- விவாகம் செய்துகொண்ட பின் அவள் புருஷனை விட்டு நீங்க இடம்கொடுக்க வேண்டும் அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக்கூடாது.
- சொத்தில் பெண்களுக்கு பெற்றோர் கூடிய பங்கை கொடுக்கவேண்டும்.
- விவாகம் இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்ருல் கௌரவமாக சீவிக்கவிரும்பும் பெண்களை யதேச்சையாக தொழில் செய்து சீவிக்க இடம் கொடுக்க வேண்டும்.
- பெண்கள் கணவனைத்தவிர, வேறு ஆண்களுடன் பேசக் கூடாது என்றும், பழகக்கூடாது என்றும் பயத்தாலும், பொருமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை ஒழித்துவிட வேண்டும்.
- பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.
- தகுதியுடன் அவர்கள் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினுலும் அதை சட்டம் தடுக்கக்கூடாது.

# என்று தணியும் இந்த அகதிகள் பிரச்சனை?

தற்போது இஸ்ரேலாக விளங்கும் நாட்டில் 1949-ம் ஆண்டிற்கு முன் பாலஸ்தீனர்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். அதே காலப்பகுதியில் யூதர்கள் சிதறுண்டு நாடற்றவர்களாகவும், அகதிகளாகவும் அடிமைகளாகவும் சொல்லொண்ணுக் கொடுமைகளுக்கு ஆளாகி வாழ்ந்தனர். முக்கியமாக ஜேர்மனியில் சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சியில் அங்கு வாழ்ந்த யூதர்கள் சித்திரவதைக்கும் கொலைக்கும் ஆளாகினர். நச்சுவாயு மூலமும், இன்னும் புதை குழிகளிலும் சுட்டும் பொசுக்கியும் அழிக்கப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போரில் காயப்பட்ட ஜேர்மனிய போர் வீரர்கட்கு யூதர்களிலிருந்தே இரத்தம் பெறப்பட்டு பாய்ச்சப்பட்டது. அங்கு யூதர்களை கொலை செய்வதாயின் சட்ட சம்பிரதாயம், அல்லது பால், வயது ஒன்றும் கணிக்கப்படவில்லை. ஆண்கள் பெண்கள், வயோதிபர் குழந்தைகள் நோயாளிகள், பலசாலிகள் ஒன்றுமே கணக்கில் இல்லை. சித்திரவதை, கொலை இதுவே தாரக மந்திரம். அல்லற்பட்டு ஆற்ருத யூதமக்கள் அயல் நாடுகட்கு சிதறியோடினர். இம்முயற்சியால் உறவினரை, பிள்ளைகளை, மனைவியை, கணவனை, பெற்ரோரை இழந்தவர் ஆயிரம் ஆயிரம் பேர்.

அன்று எப்படி யூதர்கள் சிதறி சின்னபின்னப்பட்டு வாழ்ந்தார்களோ, அதேபோல் இன்று பாலஸ்தீனியர்களும் வாழ்கிருர்கள். ஆனல் இதில் ஒரு வேடிக்கை என்னவெனில் பாலஸ்தீனியர்களை இந்நிலைக்கு ஆளாக்கினவர்களும் ஆளாக்குகிறவர்களும்வே ாருமல்லர். அதே யூதர்கள்தான் என்ருல் மனித நேயம் எப்படி இருக்கிறது பாருங்கள்.

அன்று யூதர்கள் அனுபவித்த வேதனைகள், துயர்களை அறிந்தவர் கண்ணீர் மல்குவர். இதற்கு ஒரு உதாரணம்; ஹிட்லரின் கொடுமைகளுக்கு ஆளாகிய யூதர்களுக்கு ஒரு நிவாரணமாகவும், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியும் சர்வதேச அரங்கில் ஒரு விசாரணை மன்றம் நிறுவப்பட்டுள்ளது. இதில் ஈச்மன் போன்ற ஹிட்லரின் உதவியாளர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர். இப்படி ஒரு விசாரணையின்போது ஒரு சாட்சி அளித்த வாக்கு மூலம் இதோ:

''எஸ். எஸ். அதிகாரி (நாஜி அதிகாரி) ஒருவன் துவக்குடன் நின்று கட்டளையிட்டதற்கிணங்க அந்த மக்களில் ஆண்கள், பெண்கள் எல்லா வயதினருமான குழந்தைகள் தாங்கள் உடுத்திருந்த ஆடைகளைக் கழற்றினர். சப்பாத்து வேறு, உள்ளங்கி வேறு, ஆடைகள் வேறு இப்படியாக நிரல்படுத்தப்பட்டிருந்த இடங்களில் கொண்டுசென்று போட்டனர்.

''ஒரு எதிர்ப்போ குறையோ அழுகையோயின்றி குடும்பம் குடும்பமாக கூடி நின்றனர். எஸ். எஸ். அதிகாரி சைகை காட்டியதும் முத்தமிட்டு பிரியாவிடை பெற்றனர். அதில் நான் நின்ற 15 நிமிடங்களிலும் ஒருவரேனும் கருணை கேட்டு புலம்பியதைக் காணவில்லை.

''ஐஸ் போன்ற நரைத்த தலைமயிரைக்கொண்ட பாட்டி ஒரு வயதுக் குழந்தையை தன் கையில் வைத்து தாலாட்டினுள். குழந்தை பேதலித்து அழ, அதன் பெற்ருேர் அருகில் கண்ணீர் மல்க நின்றனர். ஒரு தந்தை பத்து வயதுப் பையனை கையில் பிடித்து ஏதோ மெதுவாக அவன் காதில் போட அவன் அழுதபடி நின்ருன். தந்தை ஆகாயத்தைக் காட்டி ஏதோ விளக்கினுர்.

அப்போது அங்கிருந்து வேறு அதிகாரி இவனுக்கு சைகை காட்ட இவன் 20 பேரை அந்த மண் குவியலுக்கு அனுப்பினுன். எனக்கு ஞாபகமிருக்கு. என் அருகால் சென்ற மங்கை 23 என சைகை காட்டிச் சென்ருள். அவளுக்கு வயது 23.

சனங்கள் அந்தக் கிடங்கில் நெருக்கமாக தலைகள் மாத்திரம் தெரிய நின்றனர். அந்தக் கிடங்கு ஏற்கனவே சடலங்களால் முக்கால்வாசி நிரம்பியிருந்தது.

வேருெரு எஸ். எஸ். அதிகாரி துவக்குடன் சிகரட் பற்றியபடி நின்று இச்சனங்களுக்கும் கட்டளையிட்டான். கிடந்த சடலங்களை மிதித்தபடி சென்று தாங்களும் கிடக்கின்றனர். துவக்குச் சத்தங்கள் கேட்டு ஓய்கின்றன.

இப்படியாக வரிசை வரிசையாக சனங்கள் இதே முறைப்படி வர வர சுடப்பட்டனர்''

> "பாலஸ்தீனியர்களை இந்நிலைக்கு ஆளாக்கியவர்களும் ஆளாக்குகிறவர்களும், வேறு யாருமல்ல, அதே யூதர்கள் தான்" —
> பாலஸ்தீனிய அகதிகள் பிரச்சனையை விளக்கமாக ஆராய்கிருர் கட்டுரையாளர்.

இது ஒரு சிறு சம்பவம். இதுபோல் யூதர்கள் பட்ட கஷ்டம் ஆயிரமுண்டு.

இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் ஹிட்லரின் கொடுமையால் பரிதவித்து எஞ்சியும், சிதறுண்டும் வாழ்ந்த யூதர்களுக்கு இரங்கி அவர்கள் ஆதியில் வாழ்ந்த இடத்தில் ஒரு நாட்டை உருவாக்கிக் கொடுத்தனர். அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா இந்த நான்கு வல்லரசுமே இதற்கு உடந்தையாயின. அதுதான் தற்போதைய இஸ்ரேல்.

**பூபாலன்**

அந்தோ பரிதாபம் அங்கு வாழ்ந்த பாலஸ்தீனியர்களை பல நாடுகளிலுமிருந்து வந்து குடியேறிய யூதர்கள் விரட்டி அடிப்பார்கள் என்று யார் தான் எதிர்பார்த்தனர்.

ஆட்சிபீடம் யூதர்வசம். குடியிருப்புக்களும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. கிடைத்த வாய்ப்பை செவ்வனே பயன்படுத்தி முன்னேறினர் யூதர்கள். ஆனல் பாலஸ்தீனியர்கள் அனுதைகள் ஆக்கப்பட்டனர். சமயப் பூசல்கள், சண்டைகள் ஏற்பட்டு பாதிக்கப்பட்டனர் பாலஸ்தீனியர்கள். தாங்கொணுத் துயரங்களோடு தங்கள் நாட்டை விட்டு, வீட்டை விட்டு உற்ருர், உறவினரை விட்டு சேதங்களின் மத்தியில் அயல்நாடுகட்கு ஓடினர். அயல்நாடுகள் இஸ்லாமிய நாடுகள். தஞ்சம் கொடுத்தன. ஐ. நா. வும் உதவியது. தற்போது பாலஸ்தானியர்கள் சிதறுண்டு எகிப்து, சவூதி அரேபியா, ஜோர்தான், சிரியா, லெபனுன் ஆகிய நாடுகளில் அகதிகளாகவும், சிறிய சிறிய குடியிருப்புக்களிலும் வாழ்ந்து வருகின்றனர். 41 ஆண்டுகளாக நிரந்தரமற்ற சீவியம் செலுத்தி வருகிருர்கள்.

அன்று அகதிகளாக்கப்பட்ட பாலஸ்தீனியர்கள், வளர்ந்து திருமணம் செய்து, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளையும் கண்டுவிட்டனர். ஆனல் அகதிவாழ்க்கை மாறவே இல்லை.

இந்தநிலை மாற பி. எல். ஓ ஸ்தாபனம், அதன் தலைவர் யாசிர் அரபாத், சர்வதேச அரங்கில்போராடிவருகின்ருர்.

எத்தனை காலம் பொறுக்க முடியும். ஆத்திரமுற்ற இளைஞர் ஆயுதமேந்துவதும்உண்டு. ஆனல் நவீன ஆயுத பலத்தால் அவை அடக்கப்படுகின்றன. அத்துடன் அப்பாவிக் குடியிருப்புக்கள் நாசமாக்கப்படுகின்றன.

இஸ்ரேலில் இருந்து குடிபெயர்ந்து அயல் நாட்டு எல்லைகளில் வாழும் இந்த பாலஸ்தீனியரைஅங்கும் நிம்மதியாக வாழ யூதர்கள் விடுவதில்லை. பயங்கரவாதம் என்ற போர்வையில் அவர்களை விரட்டி விரட்டி எட்ட எட்ட கலைத்து விடுகின்றனர்.

போனது போகட்டும். அவர்களுக்கு அருகில் ஒரு பாலஸ்தீனம் உருவாக்கி. அதில் அல்லலுறும் இந்த அகதிகள், சிதறி வாழும் பாலஸ்தீனியர்கள் குடியிருக்க நாடு கேட்கிருர்கள் அதில் நியாயம் உண்டு.

யூதர்கள் தாங்கள் பட்ட கஷ்டம்தான், இந்த பாலஸ்தீனர்களும் அனுபவிக்கிருர்கள். என்று உணர முடியாதா? நடந்து வந்தபாதையை அவர்கள் ஒருக்கால் திரும்பிப் பார்த்தால் என்ன?

நாயால் துரத்தப்பட்ட பூனை, எலியைப் போட்டு சித்திரவதை செய்கிறது. அது மிருகம்.

பகுத்தறிவு படைத்த நாம் மாற்ருனின் எண்ணக் கருத்தை உணரத் தலைப்பட வேண்டும்.

அகதி வாழ்க்கை தற்காலிகமானது. 41 வருடம் அகதிகளாக அல்லலுற வேண்டியதில்லை. 42வதுவருடம்,இனியாயினும் பாலஸ்தீனம் உருவாகட்டும்.

இயேசுவந்தார்,நபிகள் வந்தார், புத்தர் வந்தார், காந்தி வந்தார் மனிதன் மாறவில்லை அறநூல்கள் உருவாகின ஆனல் மனிதன் பூரணமாக மாறியதாக தெரியவில்லை.

இன்னெரு பகவான் தோன்றுவதற்கு முன் யூதர்கள் மனம் மாறவேண்டும். அகதிகளாக வாழும் பாலஸ்தீனர்களுக்கு நாடு பிறந்து, வாழ்வு மலர வழி பிறக்கட்டும்!

## யாககுண்டம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்தேவி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோது பிற்பகல் நான்கு மணியிருக்கும். அவர்கள் வீட்டிற்கு வந்தபோது ஐந்துமணியாகியிருந்தது.

பேரிடியான செய்தியொன்றினைச் சுசிலா வைத்திருந்தாள்.

## மொரிசியசு நாட்டில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

முதலிடம் பெறுகின்றது.

இங்கு முருக வழிபாடு தனி இடம் பெற்றிருக்கின்றது. முருகக் கடவுளை சுப்பிரமணியன், கார்த்திகேயன், வேலாயுதன், வேல் என்று வழிபாடு செய்வர். 1914ம் ஆண்டில் முதன் முதலாக காவடி விழா மலை உச்சியில் கட்டப்பட்ட சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் நடைபெற்றது. மலை உச்சியில் அமர்ந்திருக்கும் மயிலைக்காண்பதற்காக சித்திரை வருடக் காவடி விழாவின்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கு கூடுவர்.

(தொடரும்)

## மலர்கள்

தோட்ட மெங்கள் தோட்டமே
புதிய ரோஜாத் தோட்டமே
கூட்டமாகப் பாலர் வந்து
பாடி ஆடி மகிழலாம்.

பாலைப் போல வெள்ளைப் பூக்கள்
பச்சை மஞ்சல் இலைகளாம்
நீலம் சிவப்பு மலர்களாய்த்
தென்றற் காற்றில் ஆடுதே

வண்ண வண்ண மலர்களாம்
வாச முள்ள பூக்களாம்
எண்ண எண்ண இனிக்கும் இவற்றை
நேசத்தோடு போற்றுவோம்

வண்டு ஒன்று பறக்குதே
குண்டுப் பூவில் இருக்குதே
கண்டு நாங்கள் துள்ளுவோம்
தொண்டு செய்து வாழுவோம்

அரிய இனிய மலர்களாம்
ஈசனுக்கு உகந்ததாம்
பெரியதான மாலை கட்டி
பாசமாகச் சூட்டுவோம்.

— சி. சதாசிவம்

## தடயங்கள்

(7-ம் பார்க்கத் தொடர்ச்சி)

வளவு காலமும் கள்வனின் மனைவி என்ற சுமையோடு இருந்தவளுக்கு ஏதோ ஆறுதலாக இருந்தது.

''ஏன்பிள்ளை? உவன் ஆனந்தத்துக்கு ஏன் இந்த வேலை? தெருவெல்லாம் ஒவ்வொருவரும் அவளைக் கேட்கும் போது அவள் தலை குனிந்து கொள்வாள்.''

''தங்கச்சி! என்ரை கடைக்காசு கட்டவேணும் என்றே முருகானந்தம் தாலிக்கொடி அறுத்தவன். எப்பவும் 'நேர்மையாக இருந்து பழக வேணும்'' என்று உபதேசம் செய்த கடைக்காரனை அவள் மனம் எண்ணிப்பார்க்கிறது. என்ன உலகம்?

''சிவகாமி! அப்பவும் நான் நினைச்சனுன் முருகானந்தம் இப்படியான வேலை செய்யான் என்று. நான் நினைச்சது சரியாகிப்போச்சு. அது சரி இனி உன்ரை மனிசனை விட்டுவிடிவினம் என்ன?''

பாண் வாங்கப்போன சிவகாமியைக் கேட்டான் கடைக்கார சிவபுண்ணியம். உலகம் அடிக்கடி எப்படி மாறுகின்றது என்பதை நினைக்கவே அவளுக்கு சிரிப்பாக இருந்தது. மிகுதிப் பணத்தைச் சரிபார்த்து வாங்கிக்கொண்டவள்.

''எல்லாரும் விட்டபிறகு பொலிஸ்சும் கோடும் வைச்சிருக்க முடியுமே அவரை? அவர் மறியல் இருந்தாலும் பரவாயில்லை. எங்களைப் பற்றி சரியாகத் தெரிந்தால் காணும்.'' கூறிவிட்டு வேகமாக நடந்தாள்.

★

சிறையில் இருந்து விடுபட்ட முருகானந்தத்தைப் பார்க்க பலர் வந்தார்கள். அவர்கள் எல்லாம் அவன் சிறையில் இருக்கும்போது பலவிதமாக கதைத்தவர்கள். யாருடைய பேச்சைக் கேட்டு மனந்நொந்தாளோ சிவகாமி அவர்களையெல்லாம் தன்வீட்டிலே அன்று கண்டாள் அவள். முருகாளந்தம் அப்படிச் செய்திருக்கமாட்டான் என்று கூறிய சிலரும் உண்டு. அவர்கள் தன் கணவனைத் தேடி வராததையும் கண்ட சிவகாமிக்கு உலகின் பெருவுண்மை புரிந்தது.

கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உணவு பரிமாறினுள் சிவகாமி. ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் பிள்ளைகளோடு கணவன் உணவு உண்பதைக் காண அவள் கண்கள் கலங்கின.

''நீங்கள்தான்தாலிக்கொடி அறுத்தது என்று என்ன தடயத்தைக்கொண்டு உங்களைப் பிடித்தவங்கள் அப்பா?''

நீண்ட நாளாக இதயத்திலே புதைத்து வைத்திருந்த கேள்வியை கேட்டுவிட்டு கணவனை நிமிர்ந்து பார்த்தாள் சிவகாமி. அவள் கண்களில் இருந்து கண்ணீர் உருண்டது.

''சிவகாமி அதற்கு நிறைய தடயங்கள்இருந்தன. நல்லூர் முருகனுக்கு நான் இருபத்தைந்து நாளும் விரதம் தானே? அதனுல் தாடி வளர்ந்திருந்தது. கோயிலுக்கு வந்தவர்களின் வேட்டியை விட என்னுடைய வேட்டி மங்கலாக இருந்தது. சால்வை கசங்கிப்போய் இருந்தது. வறுமையாலே உடம்பு எலும்பும் தோலுமாக இருந்தது.

''பொலிஸ் என்னைப் பிடிக்க இவ்வளவு தடயங்களும் காணுதா?''

சிரித்தபடியே கேட்டுவிட்டுச் சாப்பிடத் தொடங்கினுன் முருகானந்தம்.

சிலையாக நின்ருள் சிவகாமி.

(யாவும் கற்பனை)

## குழந்தை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மனோநிலையில் நின்று

''பாலுஞ் சோறும்
உண்ணத் தந்து
படிக்கச் சொல்லும் அம்மா
காலுங் கையுங் கண்ணில்
ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா''

என்று அன்புடன் அம்மாவின் செயல்களைக் குறிப்பிடுகின்றமை மிக அழகானதாகும்.

''சிறுநண்டு மணல்மீது
படமொன்று கீறும்
சிலவேளை அதை வந்து
கடல் கொண்டு போகும்''

என்று தத்துவார்த்தம் உபதேசித்த ''மகாகவி'' இன்று எம்மத்தியில் இல்லாவிட்டாலும் இதைப் படிக்கும் குழந்தைகளின் உள்ளங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ருர்.

இலங்கைத் தமிழ்ச் சிருர்களின் வயதெல்லையைக் குறிப்பாகக் கருதி, வகுப்புவாரியாகப் பாடநூல்களைப் ''பாலபாடம்'' என்ற பெயரில் எழுதி வெளியிட்ட பெருமை நல்லைநகர் தந்த நாவலர் பெருமானுக்கே உரியதாகும். குழந்தை இலக்கிய வளர்ச்சி வரலாற்றில் இதனை ஒரு திருப்புமுனை என்று குறிப்பிடலாம்.

இன்றைய விஞ்ஞான உலகில் நவீன தொழில் நுட்பத் தேவைகளுக்கேற்ற வகையில் அறிவியல் நுட்பங்களை இனிய கவிதைகள் –சிறுகதைகள்– வில்லிசைகள் மூலம் குழந்தைகளின் உள்ளங்களில் ஆழமாகப் பதியவைக்கும் திறனை நாம் விருத்தி செய்து குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குப் புதுவடிங் கொடுக்க முயற்சிப்போமாக.

# ஜெயபுரம் ஆனைவிழுந்தான் குடியேற்றத் திட்டங்கள்

மாத்தளை ஆ. இராஜலிங்கம்

காலத்துக்குக் காலம் இந் நாட்டில் நடந்துவரும் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு வடக்கு நோக்கிவரும் மலையகத்தமிழ் மக்கள் தஞ்சமடையும் கேந்திர நிலையமே கிளிநொச்சி மாவட்டம். இந்த மாவட்டத்தில் இரண்டு கிராமங்கள். ஜெயபுரம், ஆனைவிழுந்தான் என்னும் இரண்டு குடியேற்றத்திட்டங்களே அந்தக் கிராமங்களாகும்.

1983ம் ஆண்டு ஜுலைக் கலவரத்தைத் தொடர்ந்து பல ஆயிரக் கணக்கான மலையகத் தமிழ் குடும்பங்கள் வடக்கு கிழக்கு நோக்கி குடிபெயர்ந்து வந்தன. இவ்வாறு வந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் என்ன ஆனது என்பது ஒரு புறமிருக்க, அவ்வாறு வந்தவர்களில் ஒரு பகுதியினரை உள்ளடக்கியதே ஜெயபுரம், ஆனைவிழுந்தான் ஆகியகுடியேற்றத் திட்டங்களாகும். இவைகளைத் தவிர யாழ். மாவட்டத்தில் மரவன்புலவு, கெற்பேலி ஆகிய இடங்களிலும் சில குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜெயபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய இவ்விரு கிராமங்களிலும் முறையே 449. 191 குடும்பங்கள்என்ற அடிப்படையில் மொத்தமாக 638 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. அரசாங்கத்துக்கூடாக வெளிநாட்டு உதவியுடன் சில பொது ஸ்தாபனங்கள் மூலம் 1984ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இக்குடியேற்றத் திட்டங்கள் ஐந்தாவது ஆண்டு நிறைவினை நோக்கி சென்றுகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

செடெக் 149, தென்னிந்திய திருச்சபை 50, சர்வோதயம் 198, விஷ்வஹிந்து பரிஷத் 50, என்ற அடிப்படையில் ஜெயபுரம் குடியேற்றத் திட்டத்தை நான்கு ஸ்தாபனங்களும், ஆனைவிழுந்தான் குடியேற்றத்திட்டத்திலுள்ள 191 குடும்பங்களை றெட்பாஞ ஸ்தாபனமும் மேற்பார்வை செய்து வருகின்றன.

குடும்பம் ஒன்றுக்கு ஒன்றரை ஏக்கர் மேட்டு நிலம் வழங்கப்பட்டு தற்காலிக குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. திட்ட ஆரம்பத்தில் இந்த மேட்டு நிலத்தில் ஆறு மாத இடைவெளிக்குள் கிணற்று வசதியுடன் கூடிய நிரந்தர வீட்டுவசதி செய்து கொடுப்பதுடன்; 18 மாத இடைவெளிக்குள் குடும்பமொன்றுக்கு ஒரு ஏக்கர் வீதம் வயல் நிலம் வழங்கி, ஆனைவிழுந்தான்குளம், வன்னேரி தேவன்குளம் ஆகியவற்றைத் திருத்தி நீர்ப்பாசனவசதி செய்து கொடுப்பதென்றும், இந்த 18 மாத காலத்துக்கும் மானியமாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் உணவு வசதி செய்து கொடுப்பதெனவும் புனர்வாழ்வு அமைச்சினல் உறுதி அளிக்கப்பட்டது குடியேற்றத்திட்டங்களின் பூர்த்தி மூன்றரை ஆண்டுகளாகும்.

மூன்றரை ஆண்டுகால திட்டங்களே இவை எனினும் ஐந்தாண்டு நிறைவினை எட்டிப்பிடித்துவிட்டன. இருந்தும் புனர்வாழ்வு அமைச்சினல் இங்கு குடியேறியுள்ள மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குதிகளின்படி நிரந்தர வீடுகள். கிணறுகளில் நிர்மான வேலைகள் பூர்த்தியடையவில்லை நீர்ப்பாசனத்துக்கான குளங்களின் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. வயல் நிலங்கள் கடந்த மாதத்திலேயே மகிர்ந்தளிக்கப்பட்டது. இதேவேளை அமைச்சின் வாக்குறுதியின்படி இம்மக்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுவந்த உணவு வசதிகள் மாத்திரம் குறிப்பிட்டபடி 18 மாத முடிவில் நிறுத்தப்பட்டுவிட்டமை வேடிக்கையானதாகும்.

ஐந்தாண்டுகள் நிறைவினை எட்டியும் இத்திட்டங்கள் முழுமைப் பெருமைக்கு புனர்வாழ்வு அமைச்சினது அசமந்தப் போக்கா? அல்லது இத்திட்டங்களை பொறுப்பேற்று நடத்தும் பொது ஸ்தாபனங்களின் அக்கறையற்ற தன்மையா என்பதே இங்கு கேள்விக்குறியாக அமைகின்றது.

இது குறித்து தகவல் பெறுகையில் ஒரு உண்மை புலனகியது. அதாவது இத்திட்ட ஆரம்பத்திலேயே புனர்வாழ்வு அமைச்சினல் இவைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டதென்பதே இதுவாகும். இவ்வாறு ஆரம்பத்திலேயே இவைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் அமைப்பு வேலைகள் முடங்கிக் கிடப்பதற்கான காரணம் யாது? இதேவேளை மொத்தமாக அமைக்கப்படவுள்ள 638 வீடுகளில்தற்போது90வீடுகள்மாத்திரமே கட்டி முடிக்கப்பட்டுள்ளதுடன், மொத்தமான 638 கிணறுகளில் 348 கிணறுகள் மாத்திரமே கட்டி முடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இத்திட்டங்கள் மந்த நிலை அடைந்திருப்பதற்கு நாட்டில் தற்பொழுது நிலவும் சீரற்ற நிலைமையும், மூலப்பொருள்களின் விலையேற்றமுமே காரணமென பொறுப்பேற்று நடத்தும் பொது ஸ்தாபனங்களால் கூறப்படுகின்றது. இதில்முதலாவது காரணத்தில் மாத்திரம் சில உண்மைகள் இருப்பினும் கூட, அதனை முழுமையாக எவ்வாறு நாம் ஏற்றுக் கொள்வது?

சில ஸ்தாபனங்களின் கூற்றுப்படி அதனை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்வதெனில் சகல ஸ்தாபனங்களின் அமைப்பு வேலைகளும் ஒரே சீராகத்தான் அமைந்திருத்தல் வேண்டும். மாருக அப்படி இல்லாது ஒரு ஸ்தாபனத்தின் வேலை முழுமைப் பெறும் நிலையை அடைந்திருக்க இன்னுமொரு ஸ்தாபனம் மேற்படி வேலையை ஆரம்பிக்காமலே இருப்பதென்பதுஇக்கூற்றுக்கு முரணனதாகும்.

குறிப்பாக ஜெயபுரம் திட்டத்தில் 50 குடும்பங்களை பொறுப்பேற்று நடத்தும் விஷ்வஹிந்து பரிஷத் என்னும் ஸ்தாபனம் 32 வீடுகளையும் 46 கிணறுகளையும் கட்டிமுடித்துள்ளமை கவனத்திற்குரியது. இதேவேளை இதேதிட்டத்தில் 198 குடும்பங்களை பொறுப்பேற்றுள்ள சர்வோதயம் 03 வீடுகளை மாத்திரம் கட்டி முடித்துள்ளதுடன், ஆனைவிழுந்தானில் 191 குடும்பங்களை பொறுப்பேற்று நடத்தும் றெட்பாஞ மாதிரிக்கு ஒரே ஒரு வீட்டை மாத்திரமே அமைத்து முடித்துள்ளது. பொது ஸ்தாபனங்களில் காணப்படும் இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கான காரணம் இந்த ஸ்தாபனங்களின் அசமந்தப்போக்கே என்பது இதன் மூலம் புலனகின்றது.

### வயற்காணியும் குளம் அமைப்பும்

ஒன்றரை வருட இடைவெளிக்குள் குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் வயல் காணி வழங்குவதுடன் ஆனைவிழுந்தான் குளம், வன்னேரி தேவன் குளம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்து மூன்றரை வருட இடைவெளிக்குள் இரு திடடங்களை முழுமையாக பூர்த்தி செய்வதென்பதே வாக்குறுதி. எனினும் ஐந்தாவது ஆண்டு இறுதிக் கட்டமான இவ்வாண்டிலேயே வயல் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதுடன், குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் எதுவித வேலைகளும் இதுநாள் வரை மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

(தொடரும்)

## நூலரங்கு

### சேர் முத்துக்குமாரசாமி வாழ்க்கை வரலாறு

ஆக்கியோன்:
சி. குமாரசாமி எம். ஏ.
விலை: ரூபா 12/-

தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த பெரும் புகழாளர் சேர். முத்துக்குமாரசாமி. இவர் ஆசியாவிலேயே முதல் பரிஸ்டர் பட்டம் பெற்றவர்; ஆசியாவிலேயே முதலிற் சேர் பட்டம் பெற்றவர்; சைவ சித்தாந்தம் பற்றி முதன் முதலாக ஆங்கிலத்தில் நூல்களை வெளியிட்டவர்.

இன்றைய சந்ததியினருக்கு எமது மூதாதையினரின் வாழ்க்கை வரலாறுகள் புத்தூக்கம் அளிக்க வல்லவை. அந்த வகையில் அவரின் வாழ்க்கைக் குறிப்புகளை ஆசிரியர் அவர்கள் அழகாகத் தொகுத்துள்ளார்கள்.

பல கல்லூரிகளில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவமும், அவரது ஆழ்ந்த அறிவாற்றலும், இத்தொகுப்பினைச் சிறந்த முறையில் வெளியிட உதவியுள்ளன.

1863ல் ''லண்டன் இலஸ்ரேற்றட் நியூஸ்'' என்னும் சஞ்சிகையில் வெளிவந்த படம் நூலின் அட்டையை அலங்கரிக்கின்றது.

இலங்கை வானொலியில் சேர் முத்துக்குமாரசாமிபற்றி ஆசிரியர் ஆற்றிய ஆங்கில உரையும் இந்த நூலுக்கு அணி சேர்க்கின்றது. கலாயோகி ஆனந்தக் குமாரசாமியின் வாழ்க்கைக் குறிப்புகளும் தனியான கட்டுரையாக இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

அனைவரும் படிக்கவேண்டிய நூல்; நூல் நிலையங்களில் இருக்கவேண்டிய நூல்.

— சிவா

## பழ அல்வா

(8ம் பக்கத் தொடர்ச்சி)
றிக்கொண்டே இருக்கவேண்டும்.

தனியாக முந்திரிப் பருப்பையும் திராட்சையையும் நெய்யில் வறுத்து இந்தப் பழக்கலவையில் போட்டுவிட வேண்டும். ஏலக்காய்களை தூள் செய்து இதன் மீது தூவி அல்வாப் போலப் பதமாக வரும் வரை கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். பதமாக வரும்போது நல்ல வாசனை வரும். ஓரளவு கெட்டியாகிவிடும். உடனே அடுப்பை விட்டு இறக்கிச் சிறிது ஆற வைத்துவிட்டுச் சாப்பிடலாம். இதுதான் அருமையான பழ அல்வா ஆகும்.

—ராணி

## இவ்வாரம் உங்கள் பலன்

சோதிடர் இ. மகாதேவா
22-4-90 — 28-4-90

**மேடம்:**
(அச்சுவினி, பரணி கார்த்திகை 1ம் பதம்)
உங்களுக்குப் பொறுமை இருக்சாது. அதனல் பலருடன் பகைத்துக் கொள்ளுவீர்கள். காணி பூமிச்சிந்தனை சகோதரருக்காகப்பாடுபடுதல் பொருட் செலவு, அலைச்சல், தெய்வநிந்தனை என்பன நடந்து கொண்டிருக்கும் நண்பர்கள் மாத்திரம் உதவி செய்வர்.

**இடபம்:**
(கார்த்திகை 2, 3, 4 ரோகினி மிருகசீரிடம் 1ம், 2ம் பாதம்)
நீங்கள் கொடுக்கல் வாங்கலில் வீண் பிரச்சனைப்படுவீர்கள். இனஜனங்கள் வீண்பழி சொல்வார்கள். சமூகசேவை செய்வீர்கள், அலைச்சல் ஏற்படும். சினிமா, சங்கீதம் ஆறுதலைத்தரும். ஆலயவழிபாடு உடல்நோ இருந்தாலும் தூரத்து நற்செய்திகள் வரும்.

**மிதுனம்.**
(மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புநர்பூசம் 1. 2ம், 3ம், பாதம்)
உங்களுக்கு ஆஸ்பதிரித்ச் செலவுகள் ஏற்படும். வாகன சுகம். குடும்பத்தில் மகிழ்ச்சி இனஜனக் கொண்டாட்டங்கள் இருக்கும், இளைய சகோதரத்திற்கு நன்மைகள் ஏற்படும். தொழிலிடத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படும்.

**கடகம்:**
(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.)
உங்களுக்குப் பொருட் செலவு அதிகரிக்கும், தகப்பனலும், சகோதரங்களாலும் பல உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் வீண் விவாதங்கள் ஏற்படும். மறைமுகப் பகைவர்களால் தொல்லைகள் ஏற்படும். குடும்பத்தவர்களுக்கு தாரவழியால் மனஸ்தாபங்கள் ஏற்படும். உங்களுக்கு எவ்விஷயத்திலும் மந்தப் போக்கு ஏற்படும்.

**சிங்கம்:**
[ மகம், பூரம், உத்தரம் 1-ம் பாகம் ]
உங்களுக்கு வீட்டில் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டிருக்கும், தேகப்பலவீனத்தால் மனக்குழப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கும், தகப்பன் சகோதரங்களாலும், நண்பர்களாலும் பல உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**
[ உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2-ம் பாகங்கள் ]
உங்களுக்கு வீடுகட்டுதல் அல்லது இடாம்பீகச் செலவுகனனால் அவதிப்படுவீர்கள், புதிய உழைப்புக்கள் வரும், பெண்களால் மறைமுகத்தில் வீண் பழி கேட்க நேரிடும், அரசபயம் ஏற்படும், தொழில் இடத்தில் மேலதிகாரிகள் நல்ல உதவிகள் செய்வார்கள்.

**துலாம்:**
[ சித்திரை 3, 4 சுவாதி 1, 2, 3-ம் பாகங்கள் ]
நீங்கள் இரகசியங்களைக் காப்பாற்றவேண்டும் அல்லது செய்காரியங்களில் தடைகள் ஏற்படும், இளைய சகோதரத்தால் மனக்குறையும், பொருட் செலவும் ஏற்படும், பொருள் வரவு சுமாராக இருக்கும், தொழில் ஸ்தாபனத்தில் குறை கூறுவார்கள், 'அமைதி கலக நாஸ்தி' என்பதற்கிணங்க செயற்படவும்.

**விருச்சிகம்:**
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை. ]
உங்களுடன் சிலர் வீண் சண்டை பிடிப்பார்கள், அயல

(11-ம் பக்கம் பார்க்க)

## வீட்டுத் தோட்டத்திலே

(3 ம் பக்கத் தொடர்ச்சி)
லாம். பந்தலை 3 அடி 4—5 அடி நிலத்திலேபோட்டு அதில் படரவிடலாம். இதற்கும் நோய், பூச்சி, புழுத்தாக்கங்கள் குறைவு என்றாலும் பழ ஈயின் தாக்கமே குறிப்பிடத் தக்களவு பாதிப்பைஏற்படுத்துகின்றது. இதற்கும் மேலே குறிப்பிட்ட கிருமிநாசினிகளில் ஒன்றை விசிறலாம்.

**புடோல்:**
இப்பயிரையும் வீட்டிலே ஒரு நிலையமாவது நாட்டினல் போதுமானது. இதற்கும் பாகலுக்கு போட்ட பந்தலைப் போன்றே ஒரு பந்தல் போட்டு படரவிடவேண்டும். பந்தலில் படரும்போது காய்கள் காய்க்கத்தொடங்கும், காய்களின் நுனியில சிறிய கற்களை கட்டி விடவேண்டும்'. இக்கல்லுகள் கட்டப்பட்டால்தான் காய்கள் நீளமானதாகவும் நேரானதாகவும் இருக்கும். இல்லாவிட்டால் காய்கள் சுருளுவதோடு சிறியனவாகவும் காணப்படும். இப்பயிரையும் பழஈயே கூடுதலாக தாக்குகிறது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கூறிய கிருமிநாசினிகளில் ஒன்றினை விசிறிக் கட்டுப்படுத்தலாம்.

**வல்லாரை**
இது ஒரு இலைக்கறிவகைப் பயிர் ஆகும். இதற்கு நீர் தொடர்ச்சியாக பாயும் அல்லது கிடைக்கும் இடத்தி நடலாம். கிணற்றடிக்கு அண்மையில் அல்லது குளிக்கும் அறைக்கு அண்மையில் நடலாம். இதில் எல்லாவகையான உயிர்ச்சத்துக்களும் உண்டு. இது வரிசையாக நாட்டி அழகுபடுத்துவதற்கும் சிறந்த பயிர் ஆகும்.

**பொன்னங்காணி**
இதுவும் ஒரு இலைக்கறிவகைப் பயிர் ஆகும். இதிலும் கூடுதலான உயிர்ச்சத்துக்கள் உண்டு. இப்பயிரையும் நாம் அழகிற்காக வீடுகளில் பயிரிடலாம். அத்தோடு உணவிற்காவும் பயன்படுத்தலாம். ஆகையால் வீட்டுத்தோட்ட உற்பத்தியோடு அழகைக்கூட்டுவதற்கும் மேற்கொள்லாம்.

முடிவாகக் கூறப்புகின் வீட்டுத் தோட்டமானது வீட்டினை அழகு படுத்துவதோடு மட்டுமல்லாமல் எமது அன்றட தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது. மேலும் மேலே குறிப்பிட்ட பயிர்களை மட்டும்தான் நாட்ட வேண்டும் என்ற தேவையில்லை. காலத்திற்கு ஏற்ற மாதிரி பல பயிர்களையும் நாட்டிப் பயனைப் பெறலாம். அதற்கு உதாரணமாக தக்காளி, உருளைக்கிழங்கு பயிர்களைக் குறிப்பிடலாம். இப்பயிர்கள் டிசம்பர் தொடக்கம் ஜனவரி மாதம் முற்பகுதி வரையும் நடப்பட்டால்தான் அதிக பலனைப் பெறலாம். அதற்கு வீட்டுத் தோட்டத்திலே நடுகின்ற பயிர்களுக்கு ஏற்படும் நோய், பூச்சி, புழுக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த மேலே குறிப்பிட்ட ஏதாவது ஒரு கிருமிநாசினியை வாங்கி அவற்றினை சிறிய கைத்தெளி கருவியினல் விசிறலாம்.

மேலும் வீட்டுத் தோட்ட விபரங்கள் அல்லது வீட்டுத் தோட்ட செய்கையில் ஈடுபடும்போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகள் பெறவிரும்பினல் உங்கள் பகுதி விவசாய விஸ்தரிப்பு சேவைஉத்தியோகத்தரையோ அல்லது விவசாய போதனசிரியரையோ நாடலாம் இல்லாவிட்டால் அண்மையில் உள்ள கமநல சேவை நிலையத்தில் இயங்கும் விவசாய விரிவாக்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# "எமது நியாயமான கோரிக்கைகளை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும்" - மூர்த்தி

(மட்டுவில்)

''எமது தலைவர் ஏமாற்றுவதையோ, துரோகம் நினைப்பதையோ விரும்பாதவர்· நேர்மையற்றவர்களுடன் பேசுவதை எமது தலைவர் விரும்பமாட்டார். இலங்கை அரசு எமது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் என்பது எமது நம்பிக்கை. அரசு ஏமாற்ற நினைக்கும் பட்சத்தில் நாமும் உறுதியான நடவடிக்கையை எடுக்கத் தயார் நிலையில் உள்ளோம்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி தெரிவித்தார்

திரு. மூர்த்தி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி பிரதேச அலுவலகத்திற்கு விஜயம் செய்தார். அப்போது அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

திரு. மூர்த்தி மேலும் கூறியதாவது:

எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் உலகில் மூன்ருவது வல்லரசு ஒன்றை எமது இலங்கை மண்ணைவிட்டு துரத்தியடித்தோம். இன்று அகில உலகமும் எம்மை நல்லபடி இனம் கண்டுள்ளது. எம்மை ஒரு தலைசிறந்த இயக்கமாக மதிக்கிறது.

எனவே எமது நீண்டகாலப் போராட்டத்தில் எமது மக்களின் பூரண ஒத்துழைப்பு எமக்கு இருக்கும். ஆனல் தமிழினத்தின் சுமுகமான அரசியல் நிலை ஏற்படும்வரை எம்மிடம் ஆயுத ஒப்படைப்பு என்ற பேச்சிற்கே இடமிருக்க முடியாது.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழினத்துடன் இரண்டறக் கலந்து விட்டது.

தமிழ் மக்களே விடுதலைப் புலிகள். விடுதலைப் புலிகளே தமிழ்மக்கள் என்ற நிலைப்பாடு வளர்ந்துவிட்டது. எந்த ஒரு சக்தியாலும் எம்மை அழிக்க முடியாது என்ருர்.

முஸ்லிம் சகோதரர்கள் பற்றி கேள்வி ஒன்றை கேட்ட போது, எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 500க்கு மேற்பட்ட முஸ்லிம் போராளிக்கள் இருப்பதாகத் தெரிவித்தார். (82)

# தென்மராட்சி கிழக்கு காணிக்கச்சேரி தொடர்ந்து நடைபெறும்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்களுக்குக் காணி வழங்குவதற்கான காணிக்கச்சேரி கொடிகாமம், கச்சாய் அபிவிருத்திச் செயலகத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரும் பிரதேச சபை ஆணையாளருமான திரு. சுந்தரம்பிள்ளை தலைமையிலான குழுவொன்று பரிசீலனை செய்தது.

மிருசுவில் பெரியாரோடையில் 45 ஏக்கர், மந்துவிற் கலட்டியிற் 10 ஏக்கர், கெற்பேலியில் 5 ஏக்கர் காணி நிலம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதெனக் கூறப்படுகிறது. கச்சாய். பாலாவி, மீசாலை, கொடிகாமம், அல்லாரை, போக்கட்டி, நாவற்காடு, குடமியன் ஆகிய கிராமங்களிலுமிருந்தும் மக்கள் வந்திருந்தனர்.

பரிசீலனைக்குழுவில் ஆணையாளருக்கு உதவியாக கிராம சேவையாளர் திரு. த. இரத்தினராசா, குடியேற்றப்பகுதி உத்தியோகத்தர் திரு. சி. நடராசாஆகியோர் இடம் பெற்றனர்.

இக்காணிக்கச்சேரி தொடர்ந்து மற்றுமொரு தினம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. 81)

# வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான கூட்டுறவுச்சபை உருவாக்கப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் மிகுந்த குறைந்த வேதனத்துடன் அதிகப்படியான கடமையினை ஆற்றி வருகின்றனர். அவர்கள் பெறும் வேதனம் ஏனைய நிறுவனங்களோடு ஒப்பு நோக்கும்போது குறைவானது. காலத்துக்காலம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படி கூட்டுறவு ஊழியர்களுக்கு மானியமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும்நிறைவேற்றப் பட்டன.

''அத்தியாவசிய உணவுப் பொருட்களாகிய மா, சீனி என்பன யாழ் குடாநாட்டில் தட்டுப்பாடு ஏற்படாத வண்ணம் கூட்டுறவு மொத்த நிலையத்துடன் தொடர்புகொண்டு செயல்பட வேண்டும்.''

'கூட்டுறவு நிதியிலிருந்து யாழ் மாவட்ட கூட்டுறவு சபை திட்டமிட்டிருக்கும் கூட்டுறவு அச்சகத்தை நிறுவுவதற்கு 5 லட்சம் ரூபாவை வட்டியில்லாக் கடனக கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.''

''மக்கள் வங்கி மாவட்டக் கூட்டுறவுச் சபைகளில் கல்வி அபிவிருத்திக்கு அந்தந்த மாவட்டங்களிலுள்ள மக்கள் வங்கியின் நிலையத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி மாவட்டக் கூட்டுவுச் சங்கங்களில் கல்வி அபிவிருத்திக்கு தரவேண்டும்.''

''அரிசி மா, சீனி கட்டிடப் பொருட்கள் வியாபார மொத்த விற்பனைவரியிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும்.''

''வடக்கு கிழக்கு மாகாணத்துக்கென கூட்டுறவுச் சபை ஒன்று உருவாக்கப்படவேண்டும்.'' (152)

# கால அவகாசம் முடிந்த மருந்துகளை விற்பனை செய்வோர்மீது நடவடிக்கை

(காங்கேசன்துறை)

பொதுமக்கள் உபயோகிக்கக்கூடிய கால அவகாசம் முடிவுற்ற மருந்து வகைகளை விற்பனை செய்யும் மருந்து விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உணவு, மருந்து வகைகள் மோசடி. கலப்பட கண்காணிப்பு அதிகாரி திரு.த. மகாதேவன் வடபகுதியிலுள்ள மருந்து விற்பனை நிலையமொன்றை திடீர் சோதனை செய்த சமயம அங்கு கால அவகாசம் முடிவுற்ற தோல் வியாதிக்கு உபயோகிக்கும் ''பெனிசோன்'' கிறீம் விற்பனைக்கு இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது.

இந்த மருந்து பைக்கற்றுகளைக் கைப்பற்றி அழித்ததுடன், இவ்வாறு பொது மக்கள் உபயோகிக்கக்கூடிய கால அவகாசம் முடிவுற்ற மருந்து வகைகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் திரு. மகாதேவன் எச்சரித்துள்ளார்.

## இன்று லெனின் நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாமேதை லெனின் நினைவுக் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் பலாலி வீதியில் உள்ள பொன். குமாரசாமி நூலக மண்டபத்தில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

''லெனின் சிந்தனையும் வழிகாட்டலும்'' என்ற தலைப் பின்கீழ் பலர் கருத்துரை வழங்கவிருக்கிருர்கள். [152]

## மதகு திருத்தப்படவில்லை

(மட்டுவில்)

சரசாலையை அடுத்துள்ள தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலடி வீதி மத்தியிலுள்ள மதகு கடந்த இரண்டு வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது. இதனல் வடமராட்சி தென்மராட்சி பகுதிகளுக்கிடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (82)

## பரு. சாவகச்சேரி பஸ் சேவை நடத்த கோரிக்கை

(மட்டுவில்)

பருத்தித்துறைக்கும், சாவகச்சேரிக்கு மிடையிலான இ. போ. ச 754 இலக்க பஸ் சேவையை மீண்டும் வடபிராந்திய போக்குவரத்து சபையினர் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்றும் இதன் மூலம் சரசாலை, மட்டுவில், மந்துவில், வரணி, கரவெட்டி, பருத்தித்துறைப் பகுதி பொது மக்கள் பெரிதும் பயனடைய முடியும், என்றும் சரசாலை இந்து இளைஞர் மன்றம், மகஜர் மூலம் வடபிராந்திய போக்குவரத்து சபையிடம் கேட்டுள்ளது. (82)

## சிறப்புக் கூட்டம்

(உடுவில்)

முன்னைய மானிப்பாய் வட்டாரக் கல்வி பாடசாலை அதிபர்களுக்கான சிறப்புக்கூட்டம் ஒன்று இம்மாதம் 27ம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மருதனுமடக் கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இரண்டாம் தவணையில் பாடசாலையில் மேற்கொள்ளப் படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்படும்.

முன்னைய கோப்பாய் வட்டார கல்வி பாடசாலை அதிபர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஏப்ரல் 30ம் திகதி அச்சுவேலியில் நடைபெறும். (109)

## அளவைக் கருவிகள் முத்திரையிட ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

செட்டிகுளம் உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் அளவை நிலுவைகள் திணைக்களம் வியாபாரிகளின் அளவைக் கருவிகளுக்கு இம்மாதம் 24-ம் திகதியும், 25-ம் திகதியும் முத்திரையிடும் என்று வவுனியா மாவட்ட அளவைகள் நிலுவைகள் பரிசோதகர் திரு. வை கிருஷ்ணதாசன் அறிவித்துள்ளார்.

செட்டிகுளம் உதவி அரசஅதிபர் பணிமனையில் அப்பகுதி வர்த்தகர்கள் தமது அளவை. நிலுவைகள் கருவிகளுடன் தவருது சமுகமளிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. (54)

# மனைவி, பிள்ளைகள் தடுத்தும் மதுவுக்கு அடிமையான கணவன் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

மதுவருந்தும் பழக்கத்தை நிறுத்தும்படி மனைவியும் பிள்ளைகளும் ஆலோசனை கூறியதை பொறுக்க முடியாத கணவன் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை இராசரட்ணம் (வயது 51) என்பவரே தற்கொலை செய்தவராவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினர்.

மரண விசாரணையின்போது சாட்சியமளித்த இறந்தவரின் மனைவியான சிரோன்மணி கூறியதாவது: தினமும் குடித்து விட்டு வீட்டில் இருந்து சத்தம் போடுவார். இதனை பொறுக்க முடியாமல் நானும் பிள்ளைகளும் குடிக்க வேண்டாம் என்றுகூறினேம் உடனே அவர் வீட்டிற்குள்ளிருந்த கோஸ்ரிக் சோடாவைக் கரைத்து குடித்து விட்டார்.

உடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று அனுமதித்தோம் அங்கு அவசர சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த சமயம் அவர் மரணமானர்.

யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதி உத்தியோகத்தர் மகேந்திரராசா சாட்சிகளை நெறிப் படுத்தினர்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

# சீரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைப் பகுதியிலுள்ள சகல மயானங்களையும், சேமக்காலைகளையும் உடனடியாகப் புனரமைத்து அவற்றை உன்னத நிலையில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலிவடக்கு உதவி அரச அதிபரும், பிரதேச சபை விசேட ஆணையாளருமான திரு. வை. இராசையா உத்தரவிட்டுள்ளார்.

ஒவ்வொரு உபஅலுவலக எல்லைக்குள் அமைந்திருக்கும் சுடலைகளை இனங்கண்டு அவற்றில் திருத்த, சீரமைப்பு வேலைகள் பற்றிய மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்றும் அவர் வலிவடக்குப் பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரைப் பணித்துள்ளார். (59)

## நோன்பு தொழுகை நேர அட்டவணை

| | |
|---|---|
| ஸிஹர் முடிவு | — 4. 25 |
| சுபஹ் | — 4- 40 |
| உதயம் | — 6-00 |
| லுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-22 |
| மஃரிப் | — 6-20 |
| இஷா | — 7-40 |

## இவ்வாரப் பலன்

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

வர்களுடன் அவதானமாக இருக்கவும், வீடு மனைச் செலவு அதிகரிக்கும், சகோதரங்கள் மனக்குறைப்படுவார்கள், பொருட்செலவு, வைத்தியச் செலவு கட்டுமீறி இருக்கும், ஆலய தரிசனம் கிடைக்கும், தொழில்ஸ்தாபனத்தில்மேலதிகாரிகளின் ஆதரவும், எதிர்ப்பும் மாறி மாறிக் கிடைக்கும்,சந்தர்ப்பம்அறிந்துஉங்கள் செற்பாடுகளைச் செய்யுங்கள்.

**தனுசு:**

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)

உங்களுக்கு சுகயீனங்கள் ஏற்படும். உடம்பில் கவனமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் பொறுமையுடன் நடந்து கொள்ளவும். அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும், பணமும், புகழும் தேடிவரும். எந்தவிதமான எதிர்ப்புக்களையும் சமாளித்துக் கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் ஊக்கமாக இருந்து வெற்றி பெறவும்.

**மகரம்:**

(உத்தராடம் 2, 3, 4/ திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள்)

உங்களுக்கு தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வர இடம் உண்டு. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். சினிமா, சங்கீதம்என அனுபவிப்பீர்கள், தலைச்சுற்று உடல்களைப்பு இருக்கும். புத்திரர்அல்லது சகோதரர்களால் கஷ்டங்கள் சிலசமயம் ஏற்படஇடமுண்டு. மனக்குழப்பம்தீரஆலயங்களுக்குச்சென்றுவரவும்

**கும்பம்**

(அவிட்டம் 3, 4ம் பாதங்கள், சதயம், பூராட்டாதி 1, 2ம் பாதங்கள்)

உங்களுக்கு அடிக்கடி கோபம் வரும், அகால போசனத்தால் வயிற்று நோ, தலைச்சுற்று ஏற்படும். புத்திரராலும் அல்லது சகோதரங்களால் சந்தோஷம் அடைவீர்கள். உங்களை எதிரிகள் ஒன்றும் செய்ய முடியாது பின்வாங்குவார்கள். பொருள் வரவு சுமாராக இருக்கும். கைகால் உளைவு சகஜம். வைத்திய உதவியால் ஓரளவு சுகம் ஏற்படும்.

**மீனம்:**

(பூராட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

உங்கள் சொல்வாக்கால் பல இடங்களில் செல்வாக்குப் பெறுவீர்கள். குடும்பத்தில் சிறப்புக்கள் ஏற்படும். தொழில் இடத்தில் அபிப்பிராய பேதங்கள்ஏற்பட்டுத் தீரும். தூரத்துச் செய்தியால் உங்கள் வருங்காலத்தைப் பற்றி கற்பனை செய்வீர்கள். பொருட்செலவு சகஜம், இன ஜன உதவிகளுக்கு நீங்களும் பதில்உதவிகளைச் செய்வீர்கள்.

# "தமிழகத்தில் தமிழ் போராளிகளின்பேரில் பிரசாரம்செய்வதற்குத் தடை"

## - கலைஞர் கருணாநிதி

(சென்னை)

இலங்கையிலுள்ள எந்தப் போராளிக் குழுவின் பேரிலும் தமிழ் நாட்டில் பிரசாரம் செய்வது தடை செய்யப்படும் என்று தமிழக முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினர்.

திரு. கருணாநிதி மேலும் அங்கு கூறியதாவது:

"இத்தகைய பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை சட்டம் விட்டு வைக்காது.

### கடற்றெழிலாளர் பாதுகாப்பாக உள்ளனர்

தற்போது காணமல் போன கடற்றெழிலாளர் இலங்கையில் பேசாலை என்ற இடத்தில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பாக தமிழகம் வந்து சேர்வார்கள் கடல் கொந்தளிப்பு காரணமாக அவர்கள் திரும்பி வருவது தாமதமாகிறது.

எந்த தமிழ் போராளிக் குழுக்களும் ஆயுதங்களுடன் தமிழ்நாட்டில் நடமாட தமிழக அரசு அனுமதிக்காது என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (து)

## யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது இவர்கள் உரையாற்றுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.

இந்நிகழ்ச்சியை யாழ். மாவட்டத் தளபதி திரு. பானு ஆரம்பித்து வைக்க புதுவை இரத்தினதுரை அறிமுகவுரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக எழுச்சிப்பாடகர் தேனிசை செல்லப்பா தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பாடுவார். (153)

## வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் இன்ஸ்பெக்டர் கே. மோனும், கிளிநொச்சியில் தலைமை இன்ஸ்பெக்டர் கே. அரசரட்ணமும், இன்ஸ்பெக்டர் எஸ். சுதேசநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலைய புதிய பொறுப்பதிகாரிகள் விபரம் வருமாறு:-

முல்லைத்தீவு:- ரி. ஜெயகுமார், மாங்குளம்:- இன்ஸ்பெக்டர் குகநாதன், பருத்தித்துறை:- இன்ஸ்பெக்டர் குகனேஸ்வரன், வல்வெட்டித்துறை:- இன்ஸ்பெக்டர் செல்லத்துரை. (அ)

## பிரிட்டிஷ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பதற்கும், ஒருசிலபொது வைபவங்களில்கலந்து கொள்வதற்காக இங்கு வருகின்றார்.

நாளை பிற்பகல் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில் யாழ்ப்பாணம் அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்துக்கு ஜேன் கோர்பீல்ட்விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பு செய்யும் வைபவம் நடைபெறும். மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் இவ்வைபவத்துக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளார். (வி)

## விடுதலைப் புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

● பாராளுமன்றத்தில் தமது ஆட்சிக்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொள்வதற்காகவும்.

● இளம் சந்ததியினர் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்துடனும்-

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா புதிய தேர்தல் நடாத்த உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

திடீர் பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு தயாராகி சகல நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி, தேர்தல் ஆணையாளருக்குதான் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளதாகவும், அதற்கு தேவைப்படும் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி திரு. பிரேமதாசா மேலும் தெரிவித்துள்ளார். (அ)



தமிழகத்திலிருந்து தேனிசை செல்லப்பா குழுவினரோடு வந்திருக்கும் திருமதி சொர்ணலதாவின் இசை நிகழ்ச்சி நாளை முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவிருக்கிறது. இவர் தமிழகத்தில் பிரபல்ய பாடகர் என்பது குறிப்பிடத்தக்கது [152]

## தமிழ் நாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்டதாகத் தெரிவித்தனர்.

உணவு, உடை, உறங்குமிடம் உட்பட அனைத்து உதவிகளையும் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் அளித்து வருகிறார்கள்.

பேசாலை மீனவர் சங்கம், கிராம சேவை அலுவலர் திரு. எஸ். சி. எஸ். ரெவ்பல் ஆகியோரும் இவர்களை நன்கு பராமரித்துவருகிறார்கள்

இதேவேளையில் இவர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்பும் வேலைகள் நடைபெற்று வருவதாக இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## இலங்கைத் தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டென்மார்க் ஆகிய நாடுகளும் இவ்வாறான சட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடவுச் சீட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் இம்மாதம் 16-ந் திகதி முதல் செயல்படத் தொடங்கிய இவ்வலுவலகத்தில் விண்ணப்பதாரிகளால் கையளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கொழும்பிலுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்கள் நன்கு பரிசீலனை செய்த பினபே இவ்வலுவலகத்தில் ஏற்கப்படுகின்றன. இவற்றிற்கு சுமார் 30 நாட்களுக்குள் கடவுச்சீட்டுகள் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது கடவுச் சீட்டுக்கு ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களில் பெரும்பாலானவை சர்வதேச நாட்டிற்கு செல்வதற்கானவையேயாரும். (71)

# அவுஸ்திரேலிய பயணம்: அமைச்சர்களுக்குப் பதிலாக மாணவர்களுக்கு அதிஷ்டம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு இலவசமாக பயணம் செய்யும் அதிஷ்டம் அமைச்சர்களுக்குப் பதிலாக, எட்டு மாணவர்களுக்கு கிடைக்கவுள்ளது.

எயர் லங்கா நிறுவனம், மே மாதம் 4ம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு ஏற்பாடு செய்துள்ள கன்னிப்பயணத்தில் அமைச்சர்களுக்கே இடம் வழங்க உத்தேசித்திருந்த போதிலும், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் கண்டிப்பான நேரடி அறிவுறுத்தல்களை அடுத்து, ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில், எட்டு மாகாணங்களிலும், சாதனை படைத்த எட்டு மாணவர்களுக்கே, பயண அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய, கல்வி இலாகா உயர் அதிகாரிகளின் அனுசரணையுடன், அதிஷ்டம் பெற்ற எட்டு மாணவர்களும் எயர்-லங்கா நிறுவனத்தினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும்போது அணிந்து கொள்வதற்கான விசேட கம்பளி ஆடைகளும், வழங்குவதற்கு எயர் லங்கா வசதி செய்யவுள்ளது. (அ)

## புலிகளின் போர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாடகர் தேனிசை செல்லப்பா தெரிவித்தார்.

திரு. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போதும் காங்கிரஸ்காரர்களின் பொறுப்பில் தமிழகம் இருந்த போதும் தமிழ் நாட்டு மக்கள் தம்பி பிரபாகரனின் படங்களை இல்லங்களில் தொங்க விட்டால் தங்களுக்கு இடையூறு நேரிடும் என்று அச்சவுணர்வோடு வாழ்ந்தார்கள்.

இன்று தமிழகத்தில் இந்த அச்சவுணர்வுகள் எல்லாம் வேறு எந்த அரசியல்கட்சிநீங்கயினத்தலைவர்களின் படங்களை மாட்டுவதைவிட தம்பி பிரபாகரனின்படம் தான் ஒவ்வொரு இல்லங்களிலும் தொங்கவிடப்பட்டிருக்கும் காட்சியைக் காணமுடிகிறது.

தம்பி பிரபாகரன் தமிழர்களுக்குகென்று ஒரு நாட்டை உருவாக்கித்தருவார் என்று தமிழக மக்கள் உறுதியோடு வாழ்கிறார்கள்.

வாழப்பாடி ராமமூர்த்தி, குமரி அனந்தன், கருப்பையா மூப்பனார் போன்ற காங்கிரஸ்காரர் பரப்பிய பொய்ச் செய்திகளையெல்லாம் மக்கள் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள்.

அன்று ஏற்படுத்தப்பட்ட நிலை தலைவர் எம். ஜி. ஆருக்கு செய்த துரோகமாகும். எம். ஜி ஆருக்கு முழுக்க முழுக்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மறைமுகமாக ஆதரவை தெரிவித்ததைக் கூட இவர்கள் மறுத்துவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் நடந்த போரில் விடுதலைப்புலிகள் பத்தொன்பது இந்திய இராணுவ வீரர்களைப் பிடித்து ரயர் போட்டு கொழுத்திவிட்டதாக ஒரு பொய்ச் செய்தி அப்போது அவிழ்த்துவிடப்பட்டது.

இது பொய்ச் செய்தி என்பதை தமிழகமெங்கும் தலைவர் நெடுமாறன், பெருஞ்சித்திரனார், பேராசிரியர் சாலை இளந்திரையன், பேராசிரியர் சுப-வீரபாண்டியன், பேராசிரியர் அப்துல்காதர், திராவிடக் கழகத் தலைவர் வீரமணி, சண்முகசுந்தரம் போன்ற புத்திஜீவிகள் பிரசாரம் செய்து உண்மையை எடுத்துக் காட்டினார்கள்."

"இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் மாத்தயா தம்பி பிரபாவைக் கொன்றுவிட்டதாக வானொலி தொலைக்காட்சி போன்ற வெஜன சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்தார்கள்.

அப்போது அவருடையசடலம் வவுனியா காட்டிலிருந்து வல்வெட்டித்துறைக்கு எடுத்து வந்து அடக்கம் செய்யவுள்ளார்கள் என்றும் கூறுகினார்கள். தமிழகம் சோகமயமானது. தம்பி பிரபாகரனின் படங்களை முக்கிய இடங்களிலும், வீடுகளிலும் வைத்து ஊதுபத்தி கொழுத்தி அஞ்சலி செலுத்தினார்கள்.

எங்களால் அந்தச் செய்தியை நம்ப முடியாமலிருந்தது. லண்டனிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அலுவகத்தோடு தொடர்பு கொண்டு அது பொய்ச் என்பதை தமிழக மக்களுக்கு எடுத்துக் கூறினோம்.

இதுவரை இந்திய வானொலியோ தொலைக்காட்சியோ அது பொய்ச்செய்தி என்பதை மறுக்கவில்லை என்பது முக்கிய விசயம்"

"இந்திய இராணுவத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளோடு போரிட்டு இராணுவ அந்தஸ்தை குறைந்தபடியால்தான் இன்று பாகிஸ்தான் இந்தியாவுக்த எதிராக போர் புரிவதற்கு தயாராகி வருகின்றது. ராஜீவ் காந்தியின் பிழையான அணுகுமுறையால் சர்வதேசததில் ஒரு அபகீர்த்தி தென்பட்டு விட்டது."

நிச்சயமாக தம்பி பிரபாகரனின் வழி நடத்தலில் புலிக்கொடி உலகெங்கும் பறக்கும். அதைப் பார்த்து நாங்கள் மகிழத்தான் போகின்றோம் தம்பி பிரபாகரனுக்கு உலகத்திலுள்ள 30 கோடி தமிழர்களுக்கு மதிப்பும் மரியாதையும கிடைத்திருக்கின்றது" என்றார். [152]

## இன்று விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி கிழக்கு இந்து இளைஞர் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை கைதடி கிழக்கு கடற்கரை மைதானத்தில் நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கைதடி பிரதேச பொறுப்பாளர் திரு. அப்பன் கலந்து கொள்கிறார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 22ம் திகதி வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறஉள்ளது.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஐயனார் வீதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தொன்றில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவரான ஏழாலை வடக்கைச் சேர்ந்த சண்முகம் புஷ்பராசா (63 வயது) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## சுற்றுமதில் கட்ட ஏற்பாடு

(மட்டுவில்)

மட்டுவில் மகாவித்தியாலத்தைச் சுற்றி இரண்டாயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு சுற்றுமதில் அமைப்பதற்கான முற்சியில் பாடசாலை அபிவிருத்திச் சபை ஈடுபட்டுள்ளது. (82)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை செல்லையா

தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை செல்லையா 21 - 04 - 1990ல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யாழ்ப்பாண பிரபல வர்த்தகர் R. செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆசிரியர் ஆ. கந்தையாவின் அன்புச் சகோதரியும், செல்வராணி துரைரத்தினம் [அமெரிக்கா] காலஞ்சென்ற கமலாம்பிகை, லீலாவதி, காலஞ்சென்ற ஆனந்தராசா, மாமலர் [லண்டன்], துரைரத்தினம் [பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை], திருநாவுக்கரசு, காலஞ்சென்ற பத்மினி, கருணாநிதி [சவோய் ஹொட்டேல், காங்கேசன்துறை] ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. துரைரத்தினம் [அமெரிக்கா], க. தர்மராசா [லண்டன்], யோகமணி, கிருஷ்ணகுமாரி, காந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், அருந்ததி, பிரீதம், கௌரிசங்கர், பிரியா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தையிட்டி இல்லத்தில இன்று [ 22 - 04 - 90 ] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தையிட்டி பொது மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி, தையிட்டி, காங்கேசன் துறை.

தகவல்: செ. திருநாவுக்கரசு (சி-3779)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.